Registered No. M. 1500. "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு ௧௫ 1932௵ நவம்பர்௴ பரல் ௧

உள்ளுறை

	பக்கம்
நெல்விடு தூது	௧௧௭
சமரச சன்மார்க்க போதம்	௧௨௫
தாவீது மன்னரின் தனிக் கோள்	௧௩௧
உண்மை இன்பத்திற்குரிய வழி	௧௩௫
காவிரியின் கவின்	௧௪௧
நமது நாட்டில் வழங்கும் பழங் கதைகள்	௧௪௯
சுந்தர சுலோசனு	௧௫0
இடியேறு	௧௫௧

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
ஷை ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

அடக்கவிலைப் பதிப்பு நூல்கள்

	ரூ.	அ.
சம்பந்தர் தேவாரம்	1	0
அப்பர் தேவாரம்	0	12
சுந்தரர் தேவாரம்	0	4
திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	0	10
திருவாசகம்	0	2½
தாயுமானார் பாடல்	0	4
திரு அருட்பா—(பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு) 5-வது திருமுகப் பகுதி	0	6

கந்தர் அநுபூதி

சென்னை, இராயப்பேட்டை வேத ப்ரவசன மந்திரத்து

சிவத்தியானானந்த மஹரிஷி யவர்கள் எழுதிய

கூடார்த்த தீபிகை

என்னும் புத்துரையோடு கூடியது. இதுவரை இவ்வகைத் தெளிவான அநுபூதி உரை வெளிவரவில்லையென்று படித்தோர் பலரும் கொண்டாடிக் கூறியுள்ளார். விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

நவசக்தி

‘எவ்[torn]ர்க்கும் அன்பாயிரு’ ‘என்கடன் பணிசெய்து கிடப்பதே’

கரு ஆங்கீரஸஹூ கார்த்திகைமீ பரல் க

R. கண்ணன்
எண்-7, ... மெயின் ரோடு
சென்னை-600 01

நெல்விடு தூது

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பள்—வெள்ளை
யரியா சனத்துள் ளரசரோ டென்னைச்
சரியா சனத்துள்வைத்த தாய்.

சீர்கொண்ட வெள்ளிச் சிகரமும் பொற்சிலம்பும்
வார்கொண்ட கந்தரந்தேர் மந்தரமும்—பேர்கொண்ட
வெவ்வேறாய் நின்றால் விடையேறு மெங்கோனுக்
கவ்வேறு சிந்தனையுண் டாமென்று—வெவ்வேறாய்
மூன்று மலையுங் கொடுமுடிகள் மூன்றாகத்
தோன்றுந்த்ரி கூடமெனுந் தூயமலை—ய[ா]ன்றபற்ப
சிங்கா சனமாகச் செண்பகப்பூங் காவனமே
கொங்க[ா]ர் பதியாய்க் கொலுவிருப்போன்—மங்கை
5 குழல்வாய் மொழிபாகன் குற்றாலத் தெம்மா
னிழல்பாய் குறும்பலவி னித்தன்—அழகை...
செங்கமலத் தாள்பரவச் செய்யசடை மேலிருக்குங்
கங்கைகுலத் தேயுதித்த காராளன்—தங்கப்
பொருப்புச் சிலையானைப் போற்றுதற்கா யந்தக்
கருப்புச் சிலையொளித்த காமன்—விருப்பமுடன்
முன்னா ளரனை முனியாய் வணங்குமலை
மன்னாகி நித்தம் வணங்கவென்றும்—அந்நாளில்
செண்டா லடித்துத் திருப்பியொரு சேலெழுதிக்
கொண்டா னவனுடு கொள்ளவென்றும்—தண்டாமல்
10 அத்தம் படைத்ததனை யாதுலர்க்கெல் லாங்கொடுத்து
நித்தம் புகழ்படைக்க நேமித்துச்—சித்தமுற
அன்புந் தயவு மறிவு பொறையுடைய
வின்பமு மாரு விரக்கமும்—நின்பொருட்டால்
சந்ததமும் பொன்மேருத் தன்பேர் மறைத்துலகில்
வந்த புருஷ மகாமேரு—[1]முந்துகுட
வேலைதனிற் கொள்ளாமல் மேலமலை யேறுமற்
காலமென்றுங் கோடையென்றுங் காட்டாமல்—நாலுகலை

(பிரதி) 1முநதகடகு.

பேசு தமி ழோர்க்குப் பெருகுநிதி மாரிபெய்யக்
காசினியில் வந்துதித்த கார்மேகம்— [1]தேசுபெறு
கல்விக்குக் கம்பன் கவனப் பரிநகுலன்
வில்லுக்கு வாய்த்த விறல்விசையன்—பல்லுயிர்க்குத்
தந்தைபோ லாதரவுந் தாய்போற் றயவுடைய
சிந்தையுமாய் வந்துதித்த சீவரத்னம்—விந்தைமணிப்
பொன்னின் முடிகவிக்கும் போர்வேந்தர் வாள்வேலிச்
செந்நெல் முடிகவிக்குஞ் சென்னியான்—இந்நிலத்தோர்
காதல் மதிகுளிரக் கண்குளிரக் காட்சிதருஞ்
சீதமதி போலுந் திருமுகத்தான்—போதில்
அருணமலர்க் கஞ்ச [ம]முதம்விளைந் தென்னக்
கருணை கொழிக்குமிரு கண்ணான்—ஒருமலஞ்சேர்
முன்பாரச் சேடன் முடிப்பார மத்தனையும்
தன்பாரங் கொண்ட தடம்புயத்தான்—இன்பமதப்
போர்விசைய பாணத்தைப் பொன்மலைமேல் வைத்ததெனத்
தார்புனையு நீலத் தடமார்பன்—போர்விசும்பைத்
தப்பவிட்டு வந்ததொரு தாரு[வ]னை யான்றருவிற்
கப்புவிட்ட தான தடங் கையினான்—செப்பமிடுங்
காரியத்திற் சொல்லிற் கணக்கிற் றமிழ்தெலுங்கில்
ஆரியத்தின் மீறு மவதானி—போரடித்து
நீணித் திலங்கொழித்து நெற்பொலிக்குக் குப்பையென்று
மாணிக்கந் தூ[ர்]த்தொதுக்கும் வாசலான்—ஆணிப்பொன்
கொத்தளக்குஞ் செல்வக் கொலுவினான் செந்நெலொடு
முத்தளக்குங் கோலமணி முன்றிலான்—இத்தலத்தோர்
கன்மநெறி தப்பிக் கடல்வரம்பு தப்புகினுந்
தன்மநடுச் சொல்வரம்பு தப்பாதான்—வன்மம்
வருத்துவார் மிண்டன் மலைகலங்கி னாலுங்
கருத்துக் கலங்காத கண்டன்—அரிச்சந்த்ர
மன்னன்மொழி பொய்த்தாலும் மாமறைநூல் பொய்த்தாலுஞ்
சொன்னமொழி பொய்யாத் துரந்தரிகன்—முன்னமே
சூலி முதுகிற் சுடுசோ றுவந்தளித்து
[2]நீலி பழிகழுவும் நீதிமான்—ஞாலமெய்க்கப்
பண்டோர் கலத்திற் பறையனையும் பாலிருத்தி
யுண்டோ னுபய கு[லே]ல[ா]த்துங்கன்—மண்டலத்தில்
பாலான கோடி பலசனமாம் [3]பட்சிகட்கோ
[4]ராலார் விருட்சநிக ராகினோன்—மாலேறு
நவ்விப் படைவிழியார் நாடோறுந் தீட்டுமடல்
செவ்விக் கடங்காத் திருவழகன்—தவ்வரியில்
ஓரெழுத்தைச் சொல்லி யுலகில்வரு வோர்க்குநித்த
மீரெழுத்தாய் நல்கு மியல்பினான்—பாரில்
அரியென் றெழுதுவிக்கு மன்றே லகர
வரியென் பதுமறந்த வள்ளல்—[5]திரைவளர
வட்டமிட்ட தென்சீமை [6]வட்டமெல்லா மொற்றைவரிச்
சட்டமிட்ட நாள்மணியச் சட்டமிட்டோன்—துட்டமிட்ட

(பிரதி)—1தேசப்பெரு. 2நீதி பனிகழுவும். 3பட்சிகற்குக். 4கோலார். 5திரைவாள, 6விட்டமெல்லா.

வாடுதடுத்த சத்துருவும் வந்தடுத்துத் தம்பமென்றால்
ஆதரிக்குங் கீர்த்தி யபிராமன்—பார்தலத்தில்
வெய்யோனைத் தீண்டியர[ர] விட்டதுபோற் புற்றிலொரு
கையோச்சி நாகரத்னங் காண்பித்தோன்—செய்யகன
புத்தியிலே யூகி பொறையிலே தன்மதுரை
யுத்தியிலே யப்பாசி யொப்பானோன்—பத்தி
முறையுடைய கோமான் முழுதுலகங் காக்கும்
நிறையுடைய கீர்த்தி நிபுணன்—குறையிரந்தோா
சோளியலின் முன்கிடந்த கொம்புதள்ளித் துன்னுதார்
சாளியலின் [1]முன்கிடத்துந் தாட்டீகன்—[2]வாழியதன்
காலாலே யூன்றினதைக் கையாலு மன்னவர்செங்
[3]கோலாலு மேயசைக்கக் கூடாதான்—மேலெதிர்த்தோர்
[4]வில்வாங்க விட்டெறிந்து மெல்லணையில் மாதர்சொன்ன
சொல்வாங்க வில்வாங்குஞ் சூரத்தான்—மல்வாங்கு
போர்காட்டுந் தெ[வ்]வர் புறங்காட்டித் தம்மகவைப்
பேர்காட்டிக் காணும் பெருஞ்சமுகன்—பாருலகில்
வானேத்த சக்ர மலைதான் றவறுகினுந்
தானேத்த வாரந் தவறாதான்—மேனாளில்
மட்டறவே செய்துசெய்து வாய்த்தசிவ புண்ணியத்தின்
விட்டகுறை யாய்ப்பிறந்த மீனவன்போற்—சிட்டர்
திரிகூட நாதர் திருப்பணியே செய்ய
வரிசைபெறத் தென்குடிகை வந்து—திரிகூட
மண்டபமுஞ் சித்ரசபை மண்டபமுந் தேரடியில்
மண்டபமு மீசர்கொலு மண்டபமும்—அண்டர்பிரான்
ஆலயஞ்சூழ் மண்டபமும் ஆருட்டு மண்டபமு
மாலைதிருப் பூம்பலகை மண்டபமும்—பால்சுரக்குங்
கோவா லயமுங் குவலயத்தில் மற்றுமுள்ள
தேவா லயமுஞ் சிவாலயமும்—மேவுநடை
சாலைகளு மன்னசத்ர சாலைகளுந் தென்னைமரச்
சோலைகளுஞ் செண்பகப்பூஞ் சோலைகளும்—மாலைகளும்
நந்தா வனங்களு ந[ா]றுமலர் வாவிகளும்
நந்தா வனம்பயிலு நன்னகர்க்கும்—நந்தாத
தட்டொடு தூவிகளுஞ் சந்தன தித்தயிலக்
கட்டளை பூசையறைக் கட்டளையும்—இட்டமுள்ள
தேருந் திருநாளுந் தெப்பமும் வாகனமும்
பாருலகங் கொண்டாடப் பாலித்துத்—தார்சடையோன்
மெய்யபர மானந்த வீதிக்கு நேர்வடக்காய்த்
துய்யபர மானந்தத் தோப்புவைத்துப்—பொய்[ய]மாா
அப்புநெடும் பாற்கடலி னன்றுநடு மந்தரம்போல்
தெப்பநடு வேசிகரஞ் செய்வித்துத்—தப்பாமல்
தன்மகன்பூ சித்தலிங்கந் தாயும்பூ சிப்பதுபோல்
[5]பொன்மஞ் சனக்குடமும் பூரித்து—முன்முடித்த
வாலமதி யைத்தொடர்ந்து வட்டமதி வந்ததுபோல்
தாலமிசை வெள்ளித் தளிகைசெய்து—மேலை

(பிரதி)—1முன்கிடந்த. 2வாளியதின். 3கோலாலும். 4வில்வாங்கு. 5பொராளனமஞ்.

அரிதேடச் சித்ரசபை யம்பலங்கொண் டாற்குத்
திரிகூட வம்பலமுஞ் செய்து—[1]பரிவாகிக்
குற்றாலந் தன்னிற் குடிகையர்கோன் செய்தபணி
முற்றாக நானுரைக்க முற்றுமோ—பற்றாகக்
காணவென்றா லாயிரங்கண் கண்டுவகை யாய்ப்புகழ
வேணுமென்றா [2]லாயிரநா வேணுமே—தாணுவுக்குச்
செய்தபடி யேயிலஞ்சித் தேவசே னாபதிக்குக்
கைதவர்கோன் [3]முன்முகித்த கற்பணியில்—நொய்துபடா
மண்டபமுஞ் சாயாமல் வாழ்கிணறுஞ் சாயாமல்
விண்டபெருங் கற்றாணும் வீழாமல்—தொண்டர்குழாஞ்
சற்றுமலை யாமற் றரியிட்டா னம்மம்மா
கொற்றமுடிப் பாண்டியனாற் கூடுமோ—முற்றுஞ்
சரவணை மண்டபமோ சக்ரகிரி போலத்
திருமலை [4]தன்சித் திரமோ—பெருகுதமிழ்க்
காசிவிசு வேசர் கனத்தகொலு மண்டபமோ
மாசிலாத் தென்புலியூர் மண்டபமோ—பேசும்
வரகுணன்றன் கோவில் வளமாக்கிப் பூசை
[5]விரகுபண்ணிக் கொண்ட விதமோ—திரமாகக்
கட்டளைகள் வைத்ததோ கட்டளைக்கெல் லாநிலங்கள்
விட்டசம்பிர தாய விதங்களோ—சிட்டனிவன்
சென்ம[வ]வதாரச் [6]சித்தனெனக் கொண்டாடத்
தன்மமொருவடிவாய்த் தான்வந்தோன்—தொன்மையாய்
ஆதியுல காளை அகிலே சனைப்பரவி
நீதியுல காள நெறிபெற்றோன்—வீதிபெறுந்
தென்காசி [7]நாடனைத்துஞ் சின்னணைஞ்ச பூபாலன்
தன்காசு மாணையுமே தான்செலுத்திப்—பொன்காசு[ம்]
உண்டென்று வாழ்குடியை யூர்மணிய காரர்செய்யுந்
தெண்டம் பரும்பிடிகள் தீர்ப்பித்துப்—பண்டைநாட்
காட்டுவரி யானகொடுங் காடுகா வல்வரியை
வீட்டுவரி போலே விலக்குவித்து—நாட்டில்
இடைமிடைஞ்ச லாய்ச்சனங்க ளேழுமலை யேறிப்
படைபடையென் றோடுபயந் தீர்த்துக்—கொடைநீதிச்
சோழவள மாக்கினான் சுக்ரீபன் வந்தானென்
றேழைச் சனங்களெல்லா மேத்தெடுப்பத்—தாழாது
நன்குடிகை தாங்கி நடத்துமனு நீதிகொண்டு
தென்குடிகை யூராளுஞ் சீராளன்—என்கோன்
அனந்தபற்ப [8]நாபனரு ளாரமுத வாரி
சினந்தவர்கள் [9]பீடறுக்குஞ் சிங்கம்—முனஞ்சேர்
தயித்திய[ன்]முன் மூவடிக்காய்த் தான்வடிவாய்ச் சென்ற
வயித்திய நாதமகி பாலன்—செயித்தபெருந்
தென்பாண்டி ராச்சியமும் [10]செஞ்சிதஞ்சை கேரளமுந்
தன்பாற் கவிக்குந் தனிக்குடைக்கீழ்ப்—பொன்சேர்

(பிரதி)—1பரிவாக்கி. 2லாயிரநாள். 3முன்முகிர்த்த. 4தான்முகிர்த்த சித்திரமோ. 5விரவு. 6சித்தனெனவே. 7நாடனைத்துந் துரைச். 8நாதனரு. 9வீடறுக்குஞ். 10தெஞ் சிதஞ்சை.

வடகரைக்குள் ளேயிருந்து [1]வற்கீழ் கரைக்குங்
குடகரைக்குஞ் சீட்டெழுதுங் கோமான்—அடல்பெருகுந்
80 தென்மதுரை ராச்சியத்திற் செங்கோல் செலுத்துமொரு
தன்மதுரை செய்சுமுக [2]தானபதி—சொன்னபதி
சேதுபதி மெச்சுந்த்ரி கூடபதி காத்தமண்ட
லாதிபதி தென்கிழவை யாதிபதி—நீதிபதி
செம்புலிக்கு மாரதுரைச் சின்னணஞ்ச பூபதியாம்
நம்பெரிய சாமி நரபதிக்குப்—பம்புமிசைச்
சீர்நாட்டி யெங்குஞ் செயத்தம்ப நாட்டியொரு
பேர்நாட்டும் வாசற் பிரதானி—போர்நாட்டும்
மண்டலிகர் கண்டன் மருதூர் வயித்தியப்பன்
பண்டைநாட் செய்தபெரும் பாக்கியத்தாற்—கொண்டாடுஞ்
85 சங்கநிதி பற்பநிதி தானிரண்டு பார்புரக்கு
மங்கலமாய் வந்துதித்த வண்மைபோற்—பொங்குபுகழ்த்
தந்தச் சிவிகைச் சவரிப் பெருமாள்முன்
வந்தபிச்சப் பிள்ளை மகிபதிக்குச்—சொந்தம்
உரிமைக் குரித்தா யுரியகிளை தாங்கு
மருமைத் திருமருக [3]னானேன்—பெருமையிட்டுப்
பாவேந்த ரைப்புரக்கும் பாங்காய்த் தமிழ்நாட்டு
மூவேந்தர் வந்த முறைமைபோல்—ஆவல்
பெயரா ருடைப்பெருமாள் பிள்ளைப் பெருமாள்
செயராக் கதப்பெருமாள் தீரன்—நயகுணவான்
90 குற்றால நாதனென் னுங் கொண்டலிரு பேர்தமக்கும்
பற்றாக முன்னுதித்துப் பார்புரப்போன்—பெ[ா]ற்றாரு
வென்னுங் கொடையா னிருளப்ப பூபதிக்கு
முன்னுதித்து வந்த முகிர்த்தவான்—நன்னகர்க்கோன்
பொங்குமுச்சிக் கட்டளையும் பூஞ்சப்ர முஞ்சமைத்த
சங்குமுத்து ராயர் தயாநிதிக்கும்—எங்குமுன்
தேசந் திறையளக்கத் தென்மருதூ ராளவந்த
போசன் வயித்தியப்ப பூபதிக்கும்—பேசுகன
வாகன் விவேகன் மதுரகவி யுத்தண்டன்
நாகரிகன் குற்றால நாதனுக்கும்—மோகமாய்
95 மால்பெரிய மின்னார் மடலெழுதுஞ் சங்க்ராம
மால்பெரிய நாயகம கீபதிக்கும்—சா[ல்]புடைய
நண்பு மறிவு நயகுணமும் நீங்காத
செண்பகக் குற்றால தீரனுக்கும்—பண்பாகக்
கைத்திறஞ்சேர் பாண்டவர்க்குக் [4]கண்ணன்போ லன்புடைய
மைத்துனப்ர தாப மகராசன்—முத்துமுத்தாய்
நாவியலுஞ் சொற்புலவோர் நாட்டுபுரா ணங்களொடு
காவியத்தின் முன்பதிக்குங் காப்புப்போல்—[5]மேவியதான்
ஆற்றுந் திருப்பணிக ளாயிரங்கோ டிக்குமுன்னே
போற்றும் விநாயக பூசைபோல்—ஏற்றமாய்
100 நம்பலவிநாயகராம் நம்பர்திருச் [6]சன்னிதிக்கோ
ரம்பலவி நாயகனுண் டாக்கினேன்—சம்பு

(பிரதி)—1வற்கரைக்குங் கீழ்கரைக்குங். 2தானபதி. 3னுகினேன். 4கன்னன்போ. 5மேவியதின். 6சன்னதி.

வடவருவி குற்றால நாதருக்கு வாய்த்த
தடவரைசூழ் சித்ரநதிச் சார்பில்—அ[ை]டவாய்முன்
தென்னவனுங் காணாத தீர்த்தப் படித்துறையைச்
சன்னிதியிற் காணத் தவம்பெற்றோன்—நன்னகர்வாழ்
பண்ணவற்கும் வேணுமோர்ப் பார்[ப்]பதிக்குங் கொண்டுவந்து
விண்ணவர்கோன் வைத்த விமானம்போல்—திண்ணமாய்த்
தன்னிரண்டு கையால் தனிமே ருவைவளைத்தான்
முன்னிரண்டு மேரு முளைப்பதுபோல்—[1]இங்கில
மாமதத்தேர் சாய்ந்தாலும் வாசலிலொன் றுக்கிரண்டு
சேமத்தேர் நான்முகத்தோன் செய்ததுபோல்—கோமகற்குச்
தென்குறிஞ்சிப் பெண்பொருட்டாஞ் சீதனஞ்செய் குன்றுபோற்
பொன்குறிஞ்சி ரண்டமைத்த பூபாலன்—நன்றாய்முன்
கார்க்கடலிற் பாதைகண்ட காரணம்போல் சித்ரநதிப்
பாற்கடலிற் பாலமொன்று பாவித்தோன்—தீர்க்கமாய்
ஆதிக்கஞ் செய்யு மனந்தபற்ப நாபமன்னன்
சாதிக்குந் தர்மந் தலைசெய்து—நீதிக்குஞ்
செல்வக் குடி[தன]க்குஞ் சிவரெத்னம் வைத்[த]தென
நல்கும்வயித்திய நாதமன்னன்—வல்லமையாய்ச்
செங்கோல் செலுத்திச் செகதலத்தை யாளவந்த
நங்கோன் வயித்திய நாதமன்னன்—வெங்கோன்மை
முன்மலையுங் கீர்த்தி வடமலையிற் சென்றேறத்
தென்மலையை யாளுஞ் செயதுங்கன்—பன்மலரும்
நானதியுந் தேனும் நவநிதியுந் தன்பொருனை
மானதியுஞ் சேர்கடனை மாநதியான்—[2]சேனைநிலை
கூட்டினன் வெ[ல்]வேற் குமரனென்றே வொப்பம்நிலை
நாட்டினன் முள்ளிவள நாட்டினன்—ஊட்டுசுவை
கண்டாடுஞ் செல்வியர்கள் கைக்கழங்கு போற்கமல
வண்டாடுந் தென்குடிகை மாநகரான்—சண்டமதன்
ஓரானை பின்காட்ட வோடைவெயில் முன்காட்டுங்
[3]காரான கும்பக் கடகளிற்றான்—சீரார்தென்
காசியான் வாணர் கலிநோயைத் தீர்ப்பதுபோல்
வாசியான் பொற்கவன வாசியான்—ஓசையால்
வீர முரசும் [4]விவாக கொடைமுரசு
மாரன் முரசொலிக்கும் வாசலான்—[5]பேரருளால்
ஆழிப் பெரும்படையை யங்கவரை யாயடக்கி
மேழிக் கொடியுயர்த்த மேகவண்ணன்—வாழ்கனகன்
தூணநிலை கொண்ட சுதகரன்போற் சற்குருவி
ஞணநிலை கொண்ட வவதானி—நாணேற்றும்
ஆலையார் செஞ்சிலைய ரன்றுபகற் போதுதந்த
மாலையான் செங்கழுநீர் மாலையான்—மேலை
யிடத்தும்வலத் தும்விசைய னேறிய தொன்ற
நடத்தும் வயித்திய [6]நாதன்—அடக்கத்தில்
வாம னெதிர்த்தவரை வாயடக்கு மந்திரியாம்
நாமன் வயித்திய நாதமன்னன்—கோமகிமைப்

(பிரதி)—1இங்கிலமாம். 2சேனைநிளை. 3காரானை. 4விபாக. 5பேருளவால். 6நாதமன்னன்.

பண்பன் சுகீர்த்திப் பரிபாலன் பூமடந்தை
நண்பன் வயித்திய நாதமன்னன்—மூன்றிலொடு
வீடெங்கும் பொன்னுற வீதிதமிழ் நாறுமுள்ளி
நாடன் வயித்திய நாதமன்னன்—நீடாளுந்
தேசத்துக் காரியமுஞ் சீமைவழிக் காரியமுங்
காசினியி லோங்குகுடிக் காரியமும்—பேசும்
அரண்மனைக் காரியமு மங்கங்கே யுள்ள
கரைமணிய காரர் கருத்தும்—துரைகிழவைச்
சின்னணைஞ்ச ராய செயபெரிய சாமிமன்னன்
தன்னுடைய காரியம்ப்ர தானமாய்—மன்னுஞ்
சிவகாரி யக்கணக்குந் திட்டவட்டங் கேட்டு
விவகாரஞ் செய்திருக்கும் வேளை —யவரவரே
என்கரும முன்கரும மென்றுசில மன்னியர்கள்
தங்கருமங் கேட்குஞ் சமுகத்தில்—சிங்கேறு
போலிருந்த கோனைப் புகழ்வயித்ய நாதனையித்
தாலம் புகழ்துரையைச் சந்தித்தேன்—மேலிரவி*

* * *

மெய்யாக நான்முகத்தோன் வெள்ளையன்ன மேறுவது
மய்யாவுன் பேரி லருமைகாண்—பொய்யாமல்
மண்ணி லிரவொழிய வான்கதிர்கள் வீசுமுனை
விண்ணி லிரவியென வேண்டாமே—தண்ணமுதாற்
சந்திரனும் நீயே தரைமேல் மகவானென்
றிந்திரனும் பேருமுனக் கேற்குமே—மந்திரிநீ
யில்லாத நாடு மிருட்டுநா டல்லவோ
செல்லா தொருகருமஞ் செல்லுமோ—வல்லாள
மேகத்தி லேபிறந்தாய் மேதினியி லேவளர்ந்தாய்
லோகத்தை நீவளர்த்தா யுத்தமா—மாகத்தில்
கற்கோட்டை யிட்ட கடல்சூ ழுலகமெல்லாம்
நெற்கோட்டை யிட்டதுரை நீகண்டாய்—வற்கான
காசியிம சேதுமுதற் கன்னியும்பொன் னித்துறையும்
தேசமெங்கு முன்னுணை செல்லுமே—வாசமாய்ச்
சொல்லு மராடந் துலுக்காண ராச்சியங்கள்
வல்லகிளைக் கெல்லாம் வகுப்புவைத்தாய்—அல்லாமற்
கோதும்பை யென்னுமொரு கோட்கார னைக்குறியாய்ப்
போதென்று தாணையமும் போடுவித்தாய்—வீதி
வடவேங் கடந்தொடுத்து வாழ்குமரி மட்டுந்
திடமாக நீயிருக்குஞ் சீமை—கடலோடி
முங்கிரிசு சீமைமுத லேழுதீ வாந்திரமும்
பொங்குகப்ப [1]லேபவனி போய்வருவாய்—நங்கண்மேல்
வாரந் தவறுன் வயித்தியநா தன்குடிகை
பாரம் பரைபெருகு பாக்கியவான்—பேருழவால்
ஆண்டிருக்கும் பண்ணை யரசிருக்கு மாஸ்த்தான
பாண்டிவள நாடுனக்குப் பட்டணங்கா—ணீண்டவயற்

---

* ஏட்டுப்பிரதியில் இதன்பின் மூன்றுபக்கம் எழுதப்பெறவில்லை ; சுமார் 18 கண்ணிகள் இங்கே விடுபட்டிருக்கலாம். (பிரதி)—1லெப்பலெறிப்.

காடெல்லாம் வீடு களமெல்லா மூடையங்கள்
நாடெல்லாஞ் செங்கோல் நட[ா]த்துமிடம்—நீடுபொலி
செய்யும் பொலிமுகமும் சேருங் களஞ்சியமும்
அய்யன் கொலுவிருக்கு மாசாரம்—வையகத்திற்
பாவீடு பள்ளியறை பட்டடையு னுப்பரிக்கை
கோவேயுன் பெத்தரிக்கங் கொஞ்சமோ—[1]சேவே
கனகுதிரை யேறிமொட்டைக் காளைமே லேறி
[2]மனகுதிரை யேறுவாய் மன்னா—தினமுமறை
சொன்னவரெல் லாமுனக்குச் சொல்லும் புரோகிதர்கள்
மன்னவரெல் லாமுனக்கு மந்திரிமார்—உன்னுடைய
சேனா பதிகள்பயிர் செய்துவருங் காராளர்
தானா பதிகள்செட்டுத் தந்திரிமார்—ஆனாத
சூழிக் கலப்பை துரையேயுன் [3]மந்திரவாள்
மேழிக் கொடியுனது மேல்விருது—மேழிதொடு
கையுடைய மள்ளர் கனபடைக்குன் காலாட்கள்
செய்புழவு கோனுனக்குச் செங்கோலே—வெய்யபெருங்
கம்புதினை சோளமென்று காடுமலைக் கேகிடக்கும்
வம்பருணைப் போற்றுகுறு மன்னியர்கள்—தும்பையென்றும்
வாய்வகுக்குஞ் சாமியென்றும் வன்குதிரை வாலியென்றும்
காய்வகுத்த புன்காடைக் கன்னியென்றும்—பேய்வாகு
நீதியற்ற [4]கேப்பையென்றும் நித்தமுனக் கேவல்செய்யுந்
தாதிமக்கள் மூப்பிமக்கள் தான்கண்டாய்—சீதவயல்
மட்டடங்காத் தீங்கரும்பு மஞ்சளிஞ்சி வாழையெல்லாம்
அட்டதிக்குங் காத்ததலை யாரிமார்—எட்பயறு
மொச்சை கடலை முதிரை துவரையெல்லாங்
கச்சைகட்டு மூழியக் காரர்காண்—இச்சைதரும்
மாங்காய் பலாக்காய் வழுதலைங்காய் மற்றுமுள்ள
தேங்காயு முன்னோடுஞ் [5]சேவகர்காண்—பாங்கான
வெண்கலமா யீயமாய் வெள்ளிசெம்பு பித்தளையாய்
மண்கலமாய்ப் பொன்கலமாய் வந்தே[ா]ரு—[6]முன்கவரு
போசனமாய் நீவகுத்த புண்ணியவா னைத்தினமு
மாசனமாய்த் தாங்கிநிற்பா ரல்லவோ—நேசனே
நெல்லென்ற வுன்பேர் நிகழ்த்தமுடி யாதெனினுஞ்
சொல்லென்ற வுன்னருளாற் சொல்லுவேன்—நல்லநல்ல
கோடைக் குறுவை குளவாளை செங்குறுவை
காடைக் கழுத்தான் கருங்குறுவை—நீடிய
மொட்டைக் குறுவை முழுத்தநெடு வாற்குறுவை
மட்டுப் படாதகுறு வைக்கிளையான்—கட்டையன்
மூக்கன்சம் பாச்சிறிய முள்ளுச்சம் பாமிளகி
காக்கைநிற மான கருஞ்சம்பாத்—தாக்கான
நேரிய சம்பா நிறைந்த புழுகுசம்பா
சீரகச்சம் பாவழகு செஞ்சம்பாப்—பேரா[ன]

(தொடரும்)

(பிரதி)—1சேவேறிக். 2மனகுதிரை. 3மந்திரிவாள். 4கெற்ப மென்றும். 5சேவிகர் காண். 6முன்கவெரு.

சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

66. பெண்மையினின்றும் தாய்மையும், தாய்மையினின்றும் இறைமையும் மலர்கின்றன.

67. பெண்மையில் பிள்ளைப் பேற்றிற்குரிய காதலும், தாய்மையில் பயன் கருதா அன்புத் தொண்டும், இறைமையில் பிறர்க்கென வாழ்தலும் திகழும்.

68. பெண் வெறுங் காமக்கூடமன்று.

69. பெண்ணை வெறுங் காமப்பொருளாகக் கருதி வாழ்வது மடமை. பெண்ணிடத்துள்ள 'பெண்மை தாய்மை இறைமை' என்னுந் தன்மைகளை உணர்ந்து நடப்பவர் பெண் பிறவியின் விழுப்பம் உணர்ந்தவராவர்.

70. பெண் ஆண் பிறவியில் உயர்வு தாழ்வு என்பது கிடையாது. இருபாலுள் உயர்வு தாழ்வு கற்பிப்பது இயற்கை நுட்பத்தை உணராமையேயாகும்.

71. ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டின் பெண் மக்கள் நிலையைப் பொறுத்து நிற்கிறது.

72. பெண்ணுரிமையுள்ள நாடு நாகரிக நாடு. அவ்வுரிமையில்லா நாடு அநாகரிக நாடு.

73. உரிமை என்பது பெண் ஆண் இருபாலார்க்கும் பொதுவாயிருப்பது. இயற்கையில் ஆணுக்குள்ள உரிமை பெண்ணுக்கும் உண்டு; பெண்ணுக்குள்ள உரிமை ஆணுக்கும் உண்டு.

74. ஒருவன் ஒருத்தியையும், ஒருத்தி ஒருவனையும் மணந்து வாழ்வது நாகரிகம். ஒருவன் பல மகளிரையும், ஒருத்தி பல ஆடவரையும் மணந்து வாழ்வது அநாகரிகம்.

75. ஒருத்தி தன்னியலுக் கியைந்த ஒருவனையும், அவ்வாறே ஒருவன் தன்னியலுக்கியைந்த ஒருத்தியையும் காதலித்து மணந்து கொள்வது இயற்கைக்கு அரண் செய்வதாகும்.

76. காதல் மணம் நலந் தருவது. காம மணமும், கட்டுப்பாட்டு மணமும், இன்ன பிறவும் நலந்தருவனவாகா.

77. காதல் மணத்தில் பிரிவு நிகழ்தல் அரிது. மற்ற மணங்களில் பிரிவு நிகழ்தல் கூடும்.

78. பெண் ஆண் கூட்டுறவு என்பது தெய்வத்தன்மை வாய்ந்தது. அதனின்றுந் தெய்வத்தன்மையை எழுப்பவல்ல அன்பு தியாகம் தொண்டு முதலிய நறுங்குணங்கள் வளர்தல் வேண்டும்.

79. உளங்கலந்த கூட்டுறவு அழுக்காறு அவா வெகுளி முதலிய தீக்குணங்களை ஒழித்து, அன்பு தியாகம் தொண்டு முதலிய நறுங் குணங்களை வளர்க்கும்.

80. நறுங் குணங்களை வளர்க்கும் ஆற்றல் காதல் மணத்துக்கு உண்டு.

81. பெண் ஆணையும், ஆண் பெண்ணையுங்காலமுழுவதும் நீத்துத் தனித்து வாழ்வது இயற்கை வாழ்வாகாது. அவ்வாழ்வினர் அன்பின் தன்மையையுங் காணாது பிறவியைப் பாழ்படுத்திக் கொண்டவராவர்.

82. மண்ணையும் பொன்னையும் வெறுப்பதும் துறவு என்று சில விடங்களில் கருதப்படுகிறது. இக் கருத்து இயற்கை வாழ்விற்கு முரண்பட்டது.

83. மண்ணும் பொன்னும் உயிர்களின் வாழ்விற்கென இயற்கை அன்னையால் வழங்கப்பட்டன. மண்பொன் முதலியன வாழ்விற்கு இன்றியமையாதன.

84. ஒவ்வொருவரும் தத்தம் இயல்புக்கியைந்த ஒவ்வொருவித முயற்சியில் தலைப்பட்டு அறவழியில் பொருளீட்டுதல் வேண்டும். முயன்று பொருளீட்டி வாழ்வு நடாத்தாது, சோம்பித்திரிந்து பிறர் கையை எதிர்பார்த்து நிற்பது வாழ்வாகாது.

85. பிறர்க்குப் பயன்படாத முறையில் பொருளைச் சேர்த்து வைப்பது பாவம்.

86. குடும்பச் செலவுக்குப் போய்ப் பொருள் எஞ்சி நிற்குமாயின், அதனைக் கல்விச்சாலை, தொழிற்சாலை, வைத்தியச்சாலை முதலிய அறச்சாலைகட்குப் பயன்படுத்தல் வேண்டும். இதுவே மன்பதைக்குத் துணைபுரியும் முறைமை.

87. உழைத்துப் பிழைக்கத் தக்க உடல் நலம் வாய்க்கப் பெற்றோர்க்குச் சோறு கூறை அளித்து உதவிபுரிவது பாவம். அவர்களைச் சோம்பேறிகளாக்குவது பெரும்பாவம்.

88. உழைத்துப் பிழைக்க இயலாத முடவர்கட்கும், குருடர்கட்கும், தீராப் பிணியாளர்கட்கும், திக்கற்ற குழந்தைகட்கும் இவரனைய பிறர்க்கும் சோறு கூறை அளித்து உதவி புரிவது புண்ணியம்.

89. வட்டிக்குக் கடன் வாங்குதலுங் கூடாது; வட்டிக்குக் கடன் கொடுத்தலுங் கூடாது.

(புறம் அகம்)

90. இயற்கை, ஒன்று. அதன் காரியம் பலவிதம்.

91. இயற்கை பலவிதமாய்க் காரியப்பட்டு ஆங்காங்கே தட்பம் வெப்பம் முதலியவற்றை வேறுபடுத்தலால், உலகில் பலவித மொழி நிறம் வழக்க ஒழுக்கங்கள் முதலியவற்றைக்கொண்ட நாடுகள் பலவாகப் பிரிந்து கிடக்கலாயின.

92. நாடு என்பது வெறும் நிலப் பரப்பன்று.

93. கல்வி தொழில் அரசு வழக்க ஒழுக்கம் நாகரிகம் முதலியவற்றாலாகிய ஒன்று நாடு (Nation) என்பது.

94. இயற்கை அன்னையின் கருணை வழிக் காரியப்பட்ட அவ்வந் நாட்டுக்குரிய தன்மைகளுக்கேற்ற வண்ணம் அவ்வந்நாட்டார் வாழ்வு நடாத்துவது சிறப்பு.

95. ஒரு நாட்டார் தம் வழக்க ஒழுக்கங்களை மற்றொரு நாட்டாரிடை வலிந்து புகுத்துவதும், இவர்கள், அவர்கள் வழக்க ஒழுக்கங்களை ஆராய்ச்சியின்றி ஏற்று நடப்பதும் இயற்கையின் பாற்பட்ட செயல்களல்ல.

96. தாய்மொழிவழிக் கல்வி பயில்வது இயற்கைக்கு அரண் செய்வதாகும். இயற்கை அறிவு விளங்கியபின்னை மற்ற மொழிகளைப் பயில்வது நலந் தரும்.

97. அவ்வந்நாட்டு மொழியில் அவ்வந்நாட்டுக்கு வேண்டப்படும் கலைகள் இயற்கை அன்னையால் அருளப்படுகின்றன.

98. நாட்டுக் கலைகளை அழியவிடும் நாடு பல நலன்களை இழந்து வாட்டமுறும்.

99. நாட்டுக் கலைகள் நாட்டின் உயிர். அவைகளை ஓம்புவது இயற்கை அன்னையின் அருள் நாடுவதாகும்.

100. இயற்கையில் அமைந்த நாடு மொழி கலை முதலியன அழியுமாறு எந்நாடு இடந்தருகிறதோ, அந்நாடு இயற்கை இன்பம் நுகர்தல் அரிது.

101. அவ்வந்நாடு தன்தன் இயற்கை வழி இயங்குகிறதா என்று பார்த்துக்கொள்ள அரசு என்பது ஏற்பட்டது.

102. அரசுகள் இயற்கைச் சட்டத்துக்கு மாறுபட்டு நடந்தால் உலகில் அமைதி நிலவாது.

103. இயற்கைஇறை பேரரசு. அவ்வரசின் உறுப்புக்களாக அரசுகள் இயங்குதல் வேண்டும். பேரரசை மறக்கும் அரசு மன்பதைக்கு நலஞ் செய்வதாகாது.

104. இயற்கைச் சட்டத்தின் வழி இயங்கும் அரசே அரசாகும்.

105. ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரைப் பற்றுவதும், இவர்கள் அவர்கட்கு எளிவருவதும் இயற்கைச் சட்டத்தை மீறுவதாகும். நாளடைவில் இரு சாரார்க்கும் கேடு நேரும்.

106. நாடுகளின் பிரிவுகள் இயற்கையால் உண்டாக்கப்பட்டன. பிரிவுகள் இயற்கையின் காரியப்பாடுகளால் நிகழ்வன. காரியப்பாடுகளுக்குக் காரண

மாக நிற்பது ஒன்றே. அவ்வொன்றை உயிராகவும் காரியப் பாடுகளை உடலுறுப்புகளாகவும் கொள்ளுதல்வேண்டும்.

107. நாடுகள் ஒன்றோடொன்று பிரிவுற்றிருந்தாலும், அவைகள் ஒன்றுடன் ஒன்று பிணங்குதல் கூடாது. அப்பிணக்கம் நாடுகளையும் நாட்டின் வழி உலகையும் துன்பஞ் செய்வதாகும்.

108. உயிர் ஒன்று. அதன் போர்வையாகிய உடல் பல உறுப்புக்களைக் கொண்டது. உடலின் உறுப்புக்கள் ஒன்றோடொன்று பிணங்கினால் உயிர் வாழ்வு என்னாகும்? உயிர் வாழ்வுக்கு உறுங்கேடு உடலின் உறுப்புக்கட்கெல்லாம் நேர்தல் இயல்பன்றோ? ஆகவே நாடுகள் ஒன்றோடொன்று பிணங்காது, இணங்கி வாழ்தல்வேண்டும். அப்பொழுதே மன்பதை இயற்கையோடியைந்த இன்ப நுகர்தல் கூடும்.

109. நாடு நிறம் மொழி முதலியவற்றை யொட்டி மக்களுக்குள் காணப்படும் வேற்றுமைகள் புறத்தோற்றத்தின் பாற்பட்டன. மக்கள் அகநிலையில் எவ்வித வேற்றுமைத்தோற்றமுமில்லை.

110. அக அமைதிக்குப் புற ஒற்றுமை இன்றியமையாதது.

111. நாடு நிறம் மொழி முதலிய புற வேற்றுமைகளைக் கொண்டு மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிப்பது அறியாமை.

112. பிறப்பில் உயர்வு தாழ்வு சில விடங்களில் கருதப்படுகிறது. இக்கருத்து ஆன்ம நேயத்தை அழிப்பதாகும்.

113. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது ஜீவகாருண்யமாகாது.

114. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் இடம் நரக பூமியாகும்.

115. பிறப்பில் மக்களெல்லாரும் சமத்துவமானவர்கள். எல்லார் உடல்களும் பூதங்களால் ஆக்கப்பட்டன. நிலம் நீர் நெருப்பு காற்று ஒளி முதலியன எல்லார்க்கும் பொதுவாகவே துணை செய்கின்றன. இன்பதுன்பங்கள் எல்லார்க்கும் பொது.

116. உயிரில் எவ்வித வேற்றுமையுமில்லை.

117. எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கும் பரம்பொருள் ஒன்றே. அது பொதுவாக எல்லாரிடத்திலும் வீற்றிருக்கிறது. ஒரே பரம் பொருளைத் தாங்கியுள்ள உயிர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிப்பது அஞ்ஞானம்.

118. எல்லா உயிர்களிடத்திலும் வீற்றிருக்கும் பரம்பொருளைஉணர்ந்து தெளியும் ஒருவன் தனக்கும் மற்ற உயிர்கட்கும் உள்ள தொடர்பை உணர்தல் கூடும். பிற உயிர்கட்குத் தீங்கு செய்வது தன்னுயிர்க்கே அத்தீங்கு செய்வதாவது அவனுக்கு நன்கு விளங்கும்.

119. தன்னுயிரைப் போல மன்னுயிரைப் பார்க்கும் தெய்வநிலை எப்படிக் கூடும்? அகநோக்கைப் பெருக்கப் பெருக்க அந்நிலை கூடும்.

120. அக நோக்கைப் பெருக்காது புற நோக்கைமட்டும் பெருக்கப் பெருக்கப் பிளவு, பிணக்கு, போர், கொலை, கொள்ளை, பொய், நிந்தனை, ஏமாற்றம், இன்ன பிற பெருகி உலகை இடர்ப்படுத்திக்கொண் டிருக்கும்.

121. அகநோக்கில் கருத்துச்செலுத்தாது, புறநோக்கிலேயே கருத்துச் செலுத்திக்கொண்டு, சகோதர நேயத்தைப்பற்றிப் பேசப்படும் பேச்சுக்களாலும், எழுதப்படும் எழுத்துக்களாலும் சிறிதும் பயன் விளையாது.

122. அக நோக்கு எனில், பெண் ஆணையும், ஆண் பெண்ணையும் துறந்து, வீட்டைவிட்டுக் காடு மலைகட் கோடித் தனித்திருந்து மூச்சைப்பிடிப்பதன்று. துறவு நுட்பம் மேலே சொல்லப்பட்டது.

123. பெண் ஆணுடனும், ஆண் பெண்ணுடனும் வாழ்தலால், தீயகுணங்கள் தேய்ந்து அன்பு வளர்கிறது. அன்பு அகநோக்குப் பெருக்கத்துக்கு உறுகருவி.

124. அகநோக்கு விரியவிரியப் புற வேற்றுமை பொன்றும். அந்நிலையில்

உயிர்க்கும் இறைக்குமுள்ள தொடர்பு தெளியப்படும். அத் தொடர்பைத் தெளியத் தெளிய உயிர்களிடத்து அன்பு என்னும் சகோதர நேயம் பெருகும்.

125. உயிர்க்கும் இறைக்கு முள்ள தொடர்பு இயல்பாயிருப்பது. அதைத் தெளிவது அநுபூதி (Realisation) எனப்படும்.

126. உயிர்க்கும் இறைக்கு முள்ள தொடர்பைத் தெளிவது ஞானம்; அதைத் தெளியாதிருத்தல் அஞ்ஞானம். இத்தெளிவிற் கென்றே தனு கரண புவன போகங்கள் இயற்கையில் ஏற்பட்டன. இவைகளை வெறுத்துத் துறந்தால் அநுபூதி உண்டாகாது. ஆதலால் அவைகளை வெறாது அவைகளுடனிருந்து கொண்டே தீக்குணங்களைப் போக்கி அன்பைப் பெருக்கிப் பெருக்கி அநுபூதி பெறுதல் வேண்டும்.

(சமயம்)

127. அன்பைப் பெருக்கி அநுபூதி பெறுதற்குரிய மார்க்கம் சமயம் என்பது.

128. சமயம் என்பது சத்தைத் தெளிதற்குரிய மார்க்கம்.

129. சத்துக்குரிய மார்க்கம் இயற்கை என்பது மேலே சொல்லப்பட்டது. ஆகவே இயற்கை நெறி சமயம் என்க.

130. இயற்கையோடியைந்த வாழ்வு சமய வாழ்வாகும்.

131. சமய வாழ்வு வேறன்று; இயற்கை வாழ்வு வேறன்று.

132. உலகியல் வாழ்வினின்றும் சமயம் பிரிந்து நிற்கும் ஒன்று என்று நினைப்பது தவறு. வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் சமயம் உண்டு.

133. 'உலக வாழ்வினின்றும் பிரிந்து நிற்பது சமய நெறியில் நிற்பது' என்று கருதுவது, கானற் சலத்தை நாடி ஓடுவது போன்றதாகும்.

134. வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் தூய்மையாயிருப்பது சமய நெறி நிற்பதற்கு அறிகுறி.

135. சமயம் என்பது, வெறும் புறக்கோலம் என்றும், சம்பிரதாயக் கட்டு என்றும் பல விடங்களில் திரிபாகக் கொள்ளப்பட் டிருக்கிறது. சமயம் வெறும் புறக்கோலமுமன்று; சம்பிரதாயக்கட்டுமன்று.

136. புறக்கோலங்களும், சம்பிரதாயக் கட்டுகளும், அவைகளை யொட்டி எழுந்த வழக்க ஒழுக்கங்களும் சமயத்தின் பெயரில் புரோகிதர்களால் நுழைக்கப்பட்டன. இவைகள், உயிர்க்கும் இறைக்கும் இயல்பாயுள்ள தொடர்பைத் தெளியப்படுத்தும் மார்க்கமாகிய சமயம் ஆகா.

137. புறக்கோலங்களும் சம்பிரதாயக்கட்டுகளும் இவைகளை யொட்டி எழுந்த வழக்க ஒழுக்கங்களும் புரோகித மதங்களின் பாற்பட்டன.

138. புரோகித மதங்கள் பல. அவை ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமாக விளங்கும்.

139. புரோகித மதங்களில் கட்டுப்பாடுகளிருத்தலால், அவை உயிர்க்கும் இறைக்குமுள்ள தொடர்பைத் தெளியப்படுத்தத் துணை செய்யா. அத்துணை செய்யாமையால் அம்மதங்களால் சகோதர நேயம் வளர்வதில்லை. அவைகள் சகோதர நேயத்தைக் குலைத்துக் கொண் டிருக்கின்றன என்றுங் கூறலாம்.

140. புறக்கோலங்கள் தொடக்கத்தில் சுகாதாரத்துக்கெனக் கோலப்பட்டன. நாளடைவில் அவைகள் சமயப் பெயரில் குடிபுகுந்தன.

141. சுகாதாரத்துக்கு முரண் செய்யும் கோலங்களும் இந்நாளில் வாழ்வில் புகுந்துள்ளன. அவை, களையப்படல் வேண்டும். சுகாதாரத்துக்கு அரண் செய்யும் புறக்கோலங்களால் தீங்கில்லை.

142. புறக்கோலங்களைப் பூண்பது கடவுள் நெறி நிற்பது என்று எண்ணுதல் தவறு. புறக்கோலங்கள் இறையை உணர்த்தா. இறையை உணர்த்துவது இயற்கை.

143. சம்பிரதாயங்கள் சமூக (Society) நலன் கருதித் தொடக்கத்தில் வகுக்கப்பட்டன. அவைகளில் மூடப் பழக்க வொழுக்கங்கள் நாளடைவில் குடி புகுந்தன. இவைகட்கும் கடவுள் நெறிக்கும் தொடர்பில்லை.

144. சமூக நலனுக்குத் துணை செய்யும் சம்பிரதாயங்களால் தீங்கு கிடையாது.

145. புறக்கோலங்களும் சம்பிரதாயங்களும் மதங்களாக நாளடைவில் புரோகிதர்களால் அறிவுறுத்தப் பட்டன.

146. புரோகித மதங்கள் புரோகிதர்களால் காணப்பட்டன.

147. சத்துக் குரிய மார்க்கமாகிய சமயம் ஒருவரால் காணப்படாதது; அஃது என்று மிருப்பது. எங்கே அது மக்களால் திரிபாக உணரப்படுகிறதோ அங்கே குருமார்களில் எவராவது ஒருவர் தோன்றி, அதன் நுட்பத்தை அக்கால தேசவர்த்தமானங் கட்கேற்ற முறையில் அவர் விளக்கிச் செல்வர்.

148. புரோகிதர்கள் குருமார்களல்ல. புரோகிதர்கள் காமக் குரோதங்களால் பீடிக்கப்பட்டவர்கள். குருமார்கட்குக் காமக் குரோதங்களில்லை. குருமார்கள் யார் என்பதும், அவர்கள் இயல்கள் இன்ன என்பதும் மேலே சிறிது விளக்கப்பட்டன.

149. புரோகித மதங்கட்கும் கடவுள் நெறியெனுஞ் சமயத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

150. சமயமென்பது என்ன? சமயமென்பது உயிர்க்கும் சத்துக்குமுள்ள தொடர்பைத் தெளியப்படுத்தும் மார்க்கம்; சத்துக்குரிய மார்க்கம் என்று சுருங்கச் சொல்லலாம். சத்+மார்க்கம்-சன்மார்க்கம்.

151. சமயமென்பது சன்மார்க்கம்.

152. சமயம் என்பது ஒன்று? பலவா? சமயம் ஒன்றே.

153. உலகில் பல சமயங்கள் பேசப்படுதற்குக் காரணம் என்னை? சமயங்கள் பலவில்லை. சமயப் பெயர்கள் பல உண்டு.

154. உலகில் மொழிகள் பலவாயிருத்தலான், சமயத்துக்கும் பெயர்கள் பல வழங்கப்படுகின்றன. உலகில் மண்ணுக்கு எவ்வளவோ பெயர்கள் வழங்கப்படுகின்றன. பெயர் பலவாயிருப்பினும் பொருள் ஒன்றேயன்றோ?

155. சமயத்தின் புறப் பெயர்களை நீக்கி, அதன் அகத்தை நோக்கின், பொருள் ஒன்றாயிருத்தல் புலனாகும்.

156. பல சமய உணர்ச்சிக்குச் சில புறக்கோலங்களும் காரணமாக நிற்கின்றன. அவரவர் புறக்கோலங் கொண்டு அவரவர் இச்சமயத்தவர் இச்சமயத்தவர் என்று சொல்லப்படுகிறார். புறக்கோலங்கள் செயற்கையா இயற்கையா என்பது கவனிக்கப் படல் வேண்டும். புறக்கோலங்கள் பிறப்பில் அமைவதில்லை. உலகில் பிறந்த பின்னை மற்றவர்கள் சேர்க்கையால் ஒருவன் ஒருவித புறக்கோலந் தாங்குகிறான். புறக்கோலங்கள் இயற்கைச் சின்னமாயின், அவைகள் படைப்பில் அமைதல் வேண்டும். அவைகள் படைப்பில் அமையாமையால் அவைகளைச் செயற்கை என்று விளக்கவேண்டுவதில்லை. புறக்கோலங்களைக் கொண்டு சமயப்பாகுபாடுகள் செய்யப்படுதலால், அப்பாகுபாடுகள் இயற்கை யின்பாற் பட்டன அல்ல என்பது வெள்ளிடைமலை. ஆகவே புறக்கோலச் சமயங்கள் உயிர்க்கும் இறைக்குமுள்ள தொடர்பைத் தெளிவிக்கும் அநுபூதி நிலை கூட்டும் இயற்கைச் சன்மார்க்க மென்னுஞ் சமயம் அன்று என்பது உணரத் தக்கது.

157. குருமார்கள் ஆங்காங்கே தோன்றி அறிவுறுத்திய சமயம் ஒன்றே. அதுவே சன்மார்க்கமென்பது. சன்மார்க்கம் ஒவ்வொரு மொழியில் ஒவ்வொரு பெயர் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பெயரையும் ஒவ்வொரு சமயமாகக் கருதுவது திரிபேயாகும். அத் திரிபு நீண்ட காலமாக உலகில் படிந்து

கிடக்கிறது. ஆனால் அதனால் பெருந் தீமை விளையாது. தமது சமயம் தமது சமயம் என்று அவரவர் கருதுமாறு அவரவர் தம்தம் சமயத்தில் நின்று ஒழுகுவாராயின், அவரவர் முடிவில் அடையும் அநுபூதி ஒன்றேயாகும். திரிபால் தாம்தாம் கருதுஞ் சமயவழி நின்றொழுகாது "என் சமயம் மெய்; உன்சமயம் பொய்" என்று வாதத்தி லிறங்கினால் தீமையே விளையும்.

158. சமயத்துக்கும் சமய வாதத் துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இது வேறு; அது வேறு.

159. சமய வாதம் பொல்லாதது. அஃது எரிபகைமுதலிய கொடுமைகளை வளர்ப்பது. எரிபகை முதலிய தீக் குணங்கள் அன்புக்கடவுளை எங்ஙனம் உணர்த்தும்?.

160, சமயவாதம் சன்மார்க்கத்தை விளங்கச் செய்யாது. சமயவாதம் இழிந்தது; மிகஇழிந்தது.

161. துன்மார்க்கத் துறைகள் பல உண்டு. அவைகளுள் தலையாயது சமய வாதம். சமயவாதிகளே துன்மார்க்கர் களில் தலையாயவர்கள். சமயவாதம் மக் களை விலங்காக்கும்.

162. எக்காரணம் பற்றியும் மக்கள் சமயவாதத்தி லிறங்கலாகாது.

163. மக்கட்குச் சமயம் இயற்கை; சமயவாதம் இயற்கையன்று.

164. பலமொழி பேசுவோர் ஒரு காட்டின்வழியே போதல் நேர்ந்தது. அவர்கள் நெடுந்தூரம் நடந்தமையால் அவர்கட்கு நீர்வேட்கை எழுந்தது. நீர் நிலை சமீபத்திலில்லை. "நீர் எங்கே கிடைக்கும்" என்று ஒருவரை ஒருவர் அவரவர் மொழியில் வேட்கை மிகுதி யால் விரைந்து கேட்டனர். ஒருவர் மொழி ஒருவர்க்குத் தெரியவில்லை. ஒருவரை ஒருவர் கேட்பது நீர் என் பதை யுணராது ஒருவரை ஒருவர் திட் டுவதாகக் கருதி ஒருவரோ டொருவர் அறைந்து கொண்டே ஓடினர். இடை யிடை அறைஅடியாகவும் உதையாகவும் முதிரலாயிற்று. பலர்க்குக் காயங்களும் உண்டாயின. இவ்வாறு போரிட்டு ஓடு வோர் எதிரில், ஓர் அழகிய நீர் நிலை திடீரெனத் தோன்றியது. அதைக் கண்டதும் எல்லாரும் போரை மறந்து, அதினிடம் விரைந்து ஓடி, நீர் அருந்தி இளைப்பாறச் சாய்ந்தனர். அங்கே பல மொழி பயின்ற ஒரு பெரியார் போந் தனர். அவர், நீர் அருந்திப் படுத்துக் கிடக்கின்ற கூட்டத்தாரைப் பார்த்தார். "இவர்கள் உடல்களில் காயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் உறக்கத் திலிருக்கிறார்கள். உண்மை யுணர்தல் வேண்டும்" என்று கருதி ஒரு மரத்தடி யில் அமர்ந்து சாதாரிப்பண் பாடினார். அப்பாட்டு, உறங்கிய பலரை எழுப்பி விட்டது. அப்பலரும் அவரைச்சூழ்ந்து கொண்டனர். அவ்வேளையில் அவர் பாட்டை ஒருவாறு முடித்து, அவர் களை நோக்கி "நீங்கள் யார்? உங்கள் உடல்களில் காயங்கள் பட்டிருத்தற்குக் காரணமென்ன?" என்று கேட்டார். நடந்ததை அவரவர் தத்தம் மொழி யில் சொற்றனர். பெரியார் உண்மை உணர்ந்துகொண்டு அவரவர் மொழி யில் அவரவர் விரும்பிய பொருள் ஒன் றென்று விளக்கிக் காட்டினார். அவர்கள் தங்கள் அறியாமை உணர்ந்து வருந்தி னார்கள். சமய வாதிகள் இக்கதை நுட் பத்தை உணர்வார்களாக.

165. பசுக்களிற் சில வெண்மையாக இருக்கின்றன; சில செம்மையாயிருக் கின்றன; சில கருமையாயிருக்கின்றன; இன்னும் வெவ்வேறு நிறமுள்ள பசுக் களுமிருக்கின்றன. சில பசுக்களுக்குக் கொம்புகள் நீண்டிருக்கின்றன; சில வற்றிற்குக் கொம்புகள் வளைந்திருக் கின்றன; பற்பலவாறு கொம்புகளுள்ள பசுக்களுமிருக்கின்றன. இப் பல திறப் புற வேற்றுமைகளுள்ள பசுக்களைக் கறந்தால், இவைகள் யாவும் அளிக்கும் பால் எத்தன்மையது? எல்லாப் பசுக் களும் வெண்ணிறப் பாலையே தருகின்

றன. சமயவாதிகள் இவ்வெடுத்துக்காட்டின் நுட்பத்தை யோர்வார்களாக.

165. புறப்பெயர் வேற்றுமைகளிற் கருத்தைச் செலுத்தச் செலுத்தப் பன்மை விகாரமே தோன்றும். புறப் பெயர்களை நீக்கி அகத்தை நோக்கினுல் ஒருமை இன்பத்தை நுகரலாம்.

166. சத்தொன்றே. அதற்குரியமார்க்கமு மொன்றே. அவ்வொன்றை எம் மொழியால் எப்பெயரால் அழைத்தால் என்ன?

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

தாவீது மன்னரின் தனிக் கோள்

[திரு. T. R. சாரங்கபாணி, M. A.,]

(உரிமை ஆக்கியோர்க்குரியது)

தோற்றுவாய்

இறைவன்றன் பேரருளை இரந்திரந்து, ஓயாது அழுதழுது கொண்ட மெய்யடியார்களுள் தாவீது மன்னரும் ஒருவராவர். இற்றைக்குச் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வதிந்த அவ்வடியாரின் அகத்துதித்த பக்திமணங் கமழும் இனிய கீதங்கள், மெய்யன்பின் திறனைக் காட்டி, பாவவுணர்வின் பான்மையை நாட்டி, புறவேடத்தை வீட்டி, அகத்தூய்மையை வலியுறுத்தி, அவருக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின்னர் உதித்த இரக்ஷகரின் தூய மதத்தின் அடிப்படையாகவும், துணைக்காரணமாகவும் இலங்கும் பேருண்மையைச் சிறிது ஆராய இனிது விளங்கும்.

"கர்த்தராகிய ஆண்டவரே! நீரே என் நோக்கமும் என் சிறு வயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்" (71 : 5)

"தேவனே! என் சிறு வயது முதல் எனக்குப் போதித்து வந்தீர்" (71 : 17) என்னும் அவருடைய மெய்யுரைகளை இளமைப் பருவத்திலேயே அவர் இயற்கையாகவே இறைவன் மாட்டுக் கொண்ட பேரன்பை வலியுறுத்துகின்றன. ஈசாயின் கடைப் புதல்வராகிய, ஆடுமேய்த்து நின்ற, அவரை ஆண்டவனின் ஆணைக் கேற்பச் சாமுவேல் அபிடேகஞ் செய்தலும் இவ்வுண்மையையே ஓதுகின்றது. (I சாமுவேல் 16 : 1-13)

போர்க்கோலங் கொண்டு, போர்க்கவசம் பூண்டு, கரத்தில் கொடும் வேல் தாங்கி, ஏலா சமவெளியில் "உங்களுள் ஒருவனை என்னுடன் பொருத ஏவுங்கள்" என்று இறுமாப்புடன் இஸ்ரவேல் வீரர்களை, கோளியாத் வீரன் நிந்தித்தலைச் செவி மடுத்து இஸ்ரவேல் மன்னனாகிய சவுலும், இஸ்ரவேல் வீரருங் கலங்க, அதுகாலை உடன் பிறந்தவர்களுக்கு உண வெடுத்துச் சென்ற தாவீது "இவனிமித்தம் ஒருவருங் கலங்க வேண்டுவதில்லை........சிங்கத்தின் கரத்தி னின்றுங் கர்டியின் கையி னின்றுங் காத்த ஆண்டவன் என்னை இப்பெலஸ்தியனின் கரத்தினின்றும் மீட்பது திண்ணம்" என்றறைந்து, கோலொன்று தாங்கி, கோளியாத்தை யணுக, இடையர்க் கோலூன்றிவரும் இளைஞனைக் கண்ட கோளியாத் வெகுளி விம்ம, அங்கம் அதிர, "அடே! என்னை நாயென மதித்துக் கோல்கொண்டு வந்தனையோ?.... உன்னுடைய ஊனை ஆகாயப் புள்ளினங்களுக்கும் கானுறை விலங்குகளுக்கும் பகிர்ந்திடுவேன்," என்றுஇறுமாப்புடன் அறைய, "நீயோ கவசம் பூண்டு வேல் தாங்கி வருகிறுய், நானோ இறைவனின் நாம வன்மையான் உன்னை அணுகினேன்" என்று விடையீந்து தாவீது, கோளியாத்தைச் சிறு கல் கொண்டு கலக்கியதை நோக்குழி (I சாமுவேல் 17.) ஈண்டும் இளமையிலிருந்தே தாவீ

துக்குத் தயாபரன் மாட்டிருந்த அன்பே போதருகின்றது.

கோளியாத் இறந்துபட்ட துணர்ந்ததும், பெலஸ்திய சேனை மருண்டு புறங்காட்டி யோடிட வெற்றியுடன் திரும்பிய சவுலையும் இஸ்ரவேல் வீரரையும் எதிர் கொண்டு வரவேற்றப் பெண்ணணங்குகள் "சவுல் கொன்றதாயிரம் தாவீது கொன்றது பதினையிரம்" (I சாமுவேல் 18 : 7) என இசைப்பாடி அழைப்ப தோர்ந்த சவுல் மன்னன், அவன் அகத்துறைந்த கடவுட்டன்மையருக, ஆங்கு மிருக நீர்மை யரும்ப, அழுக்காறு மிகுந்து, பாவமறியாப்பக்த சிகாமணியாகிய தாவீதின் உயிரைக் கவர எண்ணினான்; தாவீது மரித்தாலல்லான், தன்னுடைய அரச பதவிக்கே ஆனி நேரிடுமென உன்னினான். அழுக்காற்றான் அறிவிழந்த சவுல் அரசன் இருமுறை தன் ஈட்டியான் தாவீதைக் கொல்ல முயன்றும் தாவீது தப்பியது கண்டு, அச்சமும் அழுக்காறும் ஒருங்கே பொங்கியெழ, பெலஸ்தியர் கரத்திலேயே தாவீது மடிவது சாலவும் நன்றெனக் கொண்டு, இருநூறு பெலஸ்தியர்களைத் தாவீது கொன்றிடின், தன்னுடைய இரண்டாம் புதல்வியாகிய மீகாளை அவருக்கு மணவினை செய் தளிப்பதாக வாக்களித்தான். "அரசனின் மருகனாக யான் அருகனல்லேன்" எனத் தாவீது முதலில் மறுத்தும், பின் ஒருவாறிசைந்து, பெலஸ்தியருடன் பொருது, இருநூறு பெலஸ்தியரைக்கொன்று, அச்சின்னங்களுடன் சவுலையண்மி மீகாளை மணந்தார். தன்னுடைய சூழ்ச்சி அவலமாகிய துணர்ந்த சவுல் தயாபரன் தாவீதின் தோன்றாத் துணைவனாக இருக்கின்றாரே வென வேங்கி, மற்றொரு முறை அவரை ஈட்டியால் கொல்ல முயன்றுந் தப்பியது கண்டு மனம் புழுங்கி, எவ்வகையானும் அவரை ஒழித்தல் வேண்டுமெனத் துணிந்து, அவரை அவருடைய இல்லத்திலேயே அடுத்த நாட்காலை கொன்று வருமாறு தன்னுடைய ஏவலரை ஏவ, தாவீது சவுலின் சூழ்ச்சியை ஓர்ந்து மீகாளின் உதவியால் அன்றிரவே தம் அகத்தை விட்டோடி 59-வது கீதத்தைப்பாடிப் பரமனை வேண்டினார்.

இவ்வாறு இல்லம் நீத்துச் சென்ற தாவீது ராமாவையண்மி ஆங்குச் சாமுவேலிடம் நடந்தன வியம்பி, அவருடன் நயோதிக்குச்சென்றார். தாவீது தன்னை ஏமாற்றித் தப்பிச் சென்ற தோர்ந்த சவுல், ஒற்றர் வாயிலாகத் தாவீது நயோதியி லிருப்பதறிந்து, அழுக்காறுபிடர்பிடித்துந்த, ஏவலர்களுடன்நயோதியைய ணுகி, ஆங்குக்கடவுள் தன்மை மிகுந்து விளங்கினான். பின்னர் தாவீது யோனத்தானின் உதவியால் சவுல் தம்மை எவ்வகையானுங் கோறத் துணிந்திருப்ப தோர்ந்து, நோபியி லிருக்கும் அகிமெலக் என்னும் ஆசாரியனிடம் பொய்யறைந்து பரிசுத்த அப்பமும், கோளியாத்தின் பட்டயத்தையும் வாங்கிக்கொண்டு கத்தின் அரசனாகிய ஆகீசிடஞ் சென்றார். தாவீதைக் கண்ட பெலஸ்தியர்கள் "தாவீதுகொன்றதுபதினையிரம்" எனப் பெயர் பெற்ற தாவீது மன்னரன்றோ இவர் எனப் பேசுவது கண்டு, தாவீது அஞ்சிப் பித்தேறியவர் போலும் வேடந்தாங்கி உயிர் தப்பி அதுல்லாம் என்னுங் குகையை யடைந்தார். அதுகாலேயே அவர் 56-வது கீதத்தை யோதினார். கோளியாத்தின் பட்டயத்தையும் பரிசுத்த அப்பத்தையும் தாவீதுக்குஅகிமெலாக் அளித்ததை ஒளித்தறிந்த தேவோக் என்னுஞ் சவுலின் பணியாளன் ஒருவன், அச்செய்தியை சவுலுக்கியம்பி, அவன் கட்டளைக் கிணங்க நோபியி லிருந்த ஆசிரியர்களை யெல்லாம் கொன்றான். அவர்களுள் அபியத்தார் என்னும் ஒருவன் தப்பிச்சென்று தாவீதினிடம் நடந்தனவியம்ப, தாவீது 52, 120 முதலிய கீதங்களைப்பாடி இறைவனை இரந்து நின்றார். பின்னர் பெலஸ்தியர் கேகிலாவைக் கொள்ளையடிப்பதறிந்து, கடவுளின்உத்தரவான் தாவீது பெலஸ்தியரை வாட்டி யோட்டிக் கேகிலாவை மீட்டார். தாவீது கேகிலாவைக் காத்த

தோர்ந்த சவுல், கெடுமதி மிகுந்து, அவரைக்கொல்லமுயல்வதுணர்ந்து, தாவீது சீப் என்னும் வனாந்தரத்தில் தம்முடையநண்பர்களுடன் ஓடியொளித்தார். (ஈண்டே யவர் 63-ங் கீதம் ஓதினர்) இதனை ஒற்றர்கள் வாயிலாக ஓர்ந்த சவுல் தாவீதைக் கோற வெண்ணி சீப் வனாந்தரம் நண்ணுதலையறிந்து தாவீது பணியாளர்களுடன் மாகோன் வனாந்தரத்தை யணுக, ஆங்கும் சவுல் அவரைப் பின் தொடர இடையில் பெலஸ்தியர் தேயத்தின் மேல் படையெடுத்து வந்ததை யறிந்த சவுல், தாவீதை விட்டுச்சென்று, பெலஸ்தியருடன்பொருது அவர்களை முறியடித்து மீண்டும் 3000 வீரர்களுடன் தாவீதைத் தொடர்ந்து என் கேதியின் வனாந்தரத்தில் தேடிவருங்கால் ஆங்கிருந்த ஒரு குகையில் காலைக்கடனைக் கழிக்கச்சென்றான். அக்குகையிலேயே தாவீது தம்முடைய நண்பர்களுடன் பதுங்கி நின்றாரெனினும் தம்முடைய நண்பர்கள் வேண்டியும் சவுலைக்கொல்ல மனமெழாது "கர்த்தர் அபிடேகஞ் செய்த என் ஆண்டவனைக் கொல்லா மனதைக் கர்த்தர் எனக்கருள்க" எனவறைந்து சவுலுடைய சால்வையின் ஒரு நுனியை அறுத்துக்கொண்டு, சவுல் குகையை நீத்துச்சென்றதும், பின்போந்து "என் தகப்பனே! ....உம்மைக் குகையுள் கொல்ல எனக் சமயம் வாய்த்தும் நான் அவ்வாறு செய்தேனல்லை....நீரோ என் பிராணனை வாங்க அதை வேட்டையாடுகிறீர்....கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயம்விசாரித்து, என்காரியத்தில் உமக்கு நீதியைப்போதிப்பாராக" எனலும் சவுல், அழுக்காறழிய, அறியாமை விலக, அறிவுதுலங்க, "என்குமாரனாகிய தாவீதே....நீ என்னைப் பார்க்கிலும் நீதி நிறைந்தவன். நான் உனக்குத் தீமை இழைத்தேன். ஆனால் நீயோ எனக்கு நன்மையை நல்கினாய்" என வருந்தி தாவீதை நீத்துச் சென்றான் (i: 24: 6)ஈண்டும். தாவீதின்மெய்யன்புந் தெய்வ பக்தியும் இனிது புலனாகின்றன. அதுகாலை அவர் 34-ம் கீதத்தைப் பாடி இறைவனைப் போற்றினர்.

உண்மையை யோர்ந்த சவுல் மீண்டும் சீப் ஊராரின் சதியாலோசனைக்கிணங்கி (இது சமயம் தாவீது 54-வது கீதம் பாடிவருந்தினர்)தாவீதைஒழிக்க ஆகிலா மேட்டை யடைந்து இரவில் உறங்குகையில் தாவீதின் கையில் சிக்கியும் அவர் அவனைக் கோற உன்னாது "கர்த்தர் அவரை அழைத்தாலல்லது, அவருடைய காலம் வந்து அவர்மரித்து அல்லது யுத்தத்தில் மாண்டாலல்லான், நான் என் கரத்தைக் கடவுளால் அபிடேகஞ் செய்யப் பட்டவரைத் தீண்டா வண்ணம் ஆண்டவர் அருள்புரிக" என இயம்பிய மெய்யுரைகள் அவருடைய மெய்ப்பக்தியையே ஓதுகின்றன. இத்தகைய அகத்தூய்மையோடியைந்த தெய்வபக்தியன்றோ தாவீதின் உயிரைவேட்டையாடி நின்ற சவுலையும் "என்குமாரனாகிய தாவீதே....நான் பாவஞ் செய்தேன்....இனி உனக்கொரு பொல்லாப்புஞ் செய்யேன்" என்று இயம்புமாறு தூண்டியது. (I: 26.)

கி. பி. 1056-ம் ஆண்டு செருக்களத்தில் சவுல் இறப்ப, இடிப்புண்ட வாழ்க்கையான் ஏழாண்டுகள் நெருக்குண்டு, கதறிக் கதறிக் கீதங்கள் பாடிப்பாடி இறைவன்றன் தோன்றாத் துணையை வேண்டி வேண்டி நின்ற உத்தமராகிய தாவீது அரசராயினர். (அதுகாலை அவர் 18-ம் கீதம் பாடிப் பரமனைப் பணிந்தேத்தினர்) அவர் நாற்பதாண்டுகள் நீதி வழுவாது இறைவனருளான் அரசாண்டு நின்றார் (II: 5: 4) தீருவின் மன்னனாகிய ஈராம் தாவீதுக்கு ஓர் அழகிய மாளிகையை அமைத்திடுங்கால் அவர் 30-ம் கீதம் ஓதி இறைவனுக்கு நன்றியைச் செலுத்தினர். தம்மையெதிர்த்தெழுந்த சீரியரை உப்புப் பள்ளத்தாக்கில் முறியடித்து ஏதோமியருள்ளத்தைக் கொள்ளை கொண்ட காலத்தில் 60-ம்கீதம் இசைத்து இறைவனுக்கு நன்றி கூறினர். (II: 8 13)

இவ்வாறு இளமையிலிருந்து இறைவன் மாட்டு மாறா அன்பு நெறிபற்றி

யொழுகிய தாவீது ஒருமுறை காமப் பேயராகி நீதிவழுவினர். ஒருநாள் ஏத்தியனன உரியாவின் மனைவியாகிய பத்சேபாளின் பேரெழிலைக் கண்டு மயங்கி நீதி வழுவி, அவளுடன் கூடி, சூதால் உரியாவைக் கொன்று, உரியா இறந்த பின்னர் பத்சேபாளை அவ ருடைய மனைவி யாக்கிக் கொள்ள, காமப் பித்தால் அறிவிழந்து தாவீது ஆற்றிய பாவம் அவரைச் சூழ்ந்தது. (II : 11) ஆண்டவர் தாவீதுக்கு உண்மையை யறிவுறுத்த நாத்தானை ஏவினர். தம்முடைய பாவத்தை யோர்ந்த தாவீது "நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்" (II : 12 : 13) என்று அலறி 51-ங் கீதம் பாடிப் பரமனை இரந்தார்.

பல வாண்டுகள் கழிய, தாவீதின் மைந்தனகிய அப்சலோம் தாவீது மன்னரிடமிருந்து அரசப் பதவியைக் கவர, சூழ்ச்சி செய்வது அறிந்த தாவீது தம்முடைய மெய்யன்பர்களுடன் எருசலேமிலிருந்து புறப்பட்டு, மூப்பு ஒரு புறம் வாட்ட, துயரம் மறுபுறம் வதக்க, கண்கள் நீரரும்ப 3-ங் கீதம்பாடி யழுது ஒலிவ மலைமேலேறினர். (II : 15) அதுகாலை பென்யமீனனகிய சீமேயி என்பான் தாவீதை "இரத்தப் பிரியனே! பேலியாலின் மனிதனே! தொலைந்து போ தொலைந்து போ" என நாவில் நரம்பில்லாது நிந்தித்தான். (II : 16: 7.) சீமேயின் புன் மொழிகளைச் செவி மடுத்த அபிசாய் அவனைக் கோற அனுமதி யளிக்கத் தாவீதை வேண்ட தாவீது "என் குமாரனே என் உயிரைக்கவர முயலுங்கால், இந்தப் பென்யமீனன் என் செய்யான்? அவன் நிந்திக்கட்டும். அவன் அவ்வாறு செய்ய ஆண்டவன் அருளிட்டான் போலும்" எனக் கூறி 7-ங் கீதத்தைப் பாடினர். என்னே அன்பு நெறியின் மாண்பு.

அப்சலோம் இறந்து எட்டாண்டுகளுக்குப் பின், மூப்புத் தம்மை வந்தெய்தமையான் தாம் தம் ஆசைக் கிழத்தியாகிய பத்சிபாளுக் கீந்த உறுதிவாக்கிற்கிணங்க, அவள் மாட்டுத் தமக்குப் பிறந்த சாலோமோனுக்கு அரசீந்து (இராஜா i : 1 : 29—34.) இறக்குந் தருவாயில் சாலோமோனை விளித்து "உலகியலுக் கேற்ப நான் மறைவேன். நீ திடங்கொண்டு புருஷனுயிரு" எனவறவுரை யோதி ஆண்டவன் அடிநிழலடைந்தார்.

மேலோதிய சரிதக்குறிப்பினின்றும் தாவீதின் வாழ்க்கை, இளமைப் பருவத்தும், இடிப்புண்ட காலத்தும், அரசாண்ட வமயத்தும், அருஞ்சுதனுக் கஞ்சி யோடி யொளித்த சமயத்தும், சீமேய சபித்த காலத்தும் சாலோமோனுக் கரசீந்த சமயத்தும், இறைவன் அன்பில் திளைத்தெழும் வாழ்க்கையாகவே இலங்குதல் கண் கூடு. இன்பம் நுகர்ந்த காலத்திலும் அவர் அமலனை நாடினர்; துயரமண்டிய சமயத்திலும் அவர் ஆண்டவன் கருணையைத் தேடினர். அத்தகையமாறு நம்பிக்கையன்றே மெய்ப் பக்தியின் அடிக்கோள்; தனிக்கோளின் தனிக்கோள்! இறைவன் பேரன்பு அவருடைய அகத்தையும் புறத்தையும் பற்றி நின்றதற்கு அவருடைய உயரிய சரிதமே போதிய சான்றும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று நாடும் போலிமதம், வேடமதம், போர்வைமதம் தாவீதுஅரசரின் மதமன்று. அகத்தூய்மை என்னும் விதையான் முளைத்தெழும், நம்பிக்கையெனுஞ் செடியில் பூத்து, அன்பெனும் மலரில் காய்த்திடும் அருள் என்னுங்கனியையன்றே தாவீது இளமையிலிருந்து நாடினர்; வாழ்க்கைமுழுதும் பாடினர்; இடிப்புண்ட காலத்திலும் தேடினர்; இன்பவாழ்க்கையிலும் ஓதினர். அவர் பற்றிநின்ற தூயமதம், அவருக்கு ஆண்டவனின் பேரருளை யீட்டிய தனிக்கொள்கை, அவருடைய கீதங்களிலன்றே இனிது போதருகின்றது. அவருடைய கீதங்களையே யடிப்படையாகக் கொண்டு அவர் நாட்டிய சமயத்தை காட்டிய கொள்கைளை இனியாராய்வோம்.

உண்மை இன்பத்திற்குரிய வழி

சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவின் மொழிபெயர்ப்பு

[திரு. சி. உருத்திரபதி, பீ. ஏ.]

நான் இன்றிரவு வேதங்களினின்றும் ஒரு கதை உங்களுக்குக் கூறுகிறேன். வேதங்கள் இந்துக்களின் தூயநூல்களாகும். அவைகள் இலக்கியத்தின் ஒரு தொகுதியாம். அவைகள் இறுதிப்பாகமே வேதாந்தம் எனப்பெறும். அது நமக்குத் தொடர்புடைய தத்துவத்தைப் பற்றிக் கூறுவது; வட மொழியில் எழுதப் பெற்றுள்ளது. பல்லாயிர மாண்டுகளுக்கு முன்னர் அது எழுதப்பட்ட தென்பதை நீங்கள் நன்கு நினைவில் கொள்ளவேண்டும்.

ஒருவர் ஒரு பெரும் வேள்வி புரிய விழைந்தார். இந்து மதத்தில் வேள்வி மிகவும் முக்கியமானது. பல்வேறு வேள்விகள் உள. இந்துக்கள் பலிபீடங்கள் கட்டிப் பின் தீ வளர்த்து அதில் ஆகுதி வழங்குவார்கள்; பலமந்திரங்கள் பகருவார்கள். வேள்வி முடிவில் அந்தணர்களுக்கும் எளியவர்களுக்கும் தானம்வழங்குவார்கள். ஒவ்வொரு வேள்விக்கும் தனித்தனி மாதிரியான தானம் உண்டு. ஒருவன் தனக்குரியவற்றையெல்லாம் தானமாய் வழங்கும்படியான ஒரு வேள்வியுண்டு. அத்தகைய வேள்வியைத்தான் மேலே கூறியவர் செய்ய விரும்பினர்.

இவர் நிரம்பிய செல்வராயினும் உலோப குணம் வாய்ந்தவர். ஆனல் செயற்கரிய இவ் வேள்வி புரிந்து அதனல் வரும் புகழை மாத்திரம் அடைய விரும்பினர். அவர் இவ் வேள்வி யாற்றிய பின்னர் தம்பாலுள்ள எல்லாவற்றையும் வழங்காது, மலடும் குருடும் கால் ஊனமுள்ள பசுக்களை மாத்திரம் வழங்கினர். ஆனல் அவருக்கு நச்சிகேதன் என்ற ஓர் அறிவிற் சிறந்த மைந்தன் உண்டு. அவன் தன் தந்தைக்கு வரும் இழிவு கருதித் தன்னையே தானமாக வழங்கத் துணிந்து, தன் தந்தை வழங்காமையால் வருங் குறைவைத் தீர்க்க எண்ணினன். பிறகு தன் தந்தையை யணுகி "யாருக்கு என்னை வழங்கப் போகிறீர்?" என உசாவினன். தந்தையோ பதிலிறுத்தாரில்லை. சிறுவன் மீண்டுங்கேட்டான். தந்தையார் வாளாவிருந்தார். மீண்டுமொருமுறை கேட்டான். தந்தை மனம் வருந்தி "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன்" என்ருர். உடனே அச்சிறுவன் யமபுரிக்குச் சென்ருன்.

சிறுவன் சென்ற ஞான்று கூற்றுவன் வீட்டிலிருந்தானில்லை. அதனல் ஆங்கே அவன் காத்துக்கொண்டிருந்தான். மூன்று நாட்களுக்குப் பின்னர்க் கூற்றுவன் வந்தான். வந்ததும் "ஓ! மறையவ! நீ யென் விருந்தினன். ஆகாரமின்றி இவண் மூன்று நாட்களிருந்திருக்கிருய். உனக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். நீ பட்ட துன்பத்திற்கு உனக்கு மூன்று வரங்கள் அளிக்கிறேன்" என்று கூறினன். அதற்குச் சிறுவன் "எந்தை என்மீது கொண்ட சீற்றந் தணியவேண்டும்" என்று முதல் வரங் கேட்டான். ஒரு வேள்வியைப்பற்றியுணர வேண்டுமென்று இரண்டாவதாகக் கேட்டான். மூன்ருவதாக "ஒருவன் இறந்தபின் என் ணுகிருன்? அவன் உயிர்போய் விடுகிறதெனச் சிலர் கூறுகின்றனர். அவன் வசிக்கின்ருன் என ஏனையர் புகல்கின்ருர். இதற்கென்ன விடை" என்ருன். கூற்றுவன் கீழ்வருமாறு மறுமொழி பகர்ந்தான்: "முற்காலத்தில் கடவுளரும் இந்த அரிய விஷயங்களைப்பற்றி உணர முயன்றனர். அவை மிகவும் அரிய விஷயங்களாதலால், அதை விடுத்து வேறொன்று கேட்பாயாக. நூருண்டு உயிருடன் வாழ்வதற்கு வரங்கேள்; அளிக்கிறேன். மாடுகளும் குதிரைகளும் வேண்டு

மென்று கேள். பெரும் அரசாங்கங்கள் வேண்டுமென்று கேள். மனிதன் தனது இன்பநுகர்ச்சிக்கு என்னென்ன வேண்டுகின்றானோ அவற்றையெல்லாம் அளிக்கின்றேன். ஆனால் இந்த இரகசியத்தைப்பற்றி மாத்திரங் கேளாதே'' என்றான். அதற்குச் சிறுவன் கூறியதாவது: "மனிதன் வெறுஞ் செல்வத்தில் மகிழ்தற்கின்று. செல்வம் வேண்டுமானால் கிடைக்கும். இவ்வுலகில் அழியுந் தன்மை யுடைய மனிதன் இறவாப் புகழ் எய்தினர் கூட்டுறவு கிடைத்திருந்தும் நீண்ட ஆயுள்பெற்று இவன் பாட்டாலும் களியாட்டாலும் அடையும் மகிழ்ச்சி நிலை யற்றதென்பது நாம் அறிந்ததே. ஆகையால் இப்பிறப்பின் உண்மை யறிய ஆவல் மிக்குண்டு. வேறொன்றும் வேண்டாம்; இதுவே யான் வேண்டும் வரம்'' என்றான். இத்தகைய மறுமொழி கேட்டதும் கூற்றுவன் அளவிலா மகிழ்ச்சி கொண்டான். கடந்த இரண்டு மூன்று சொற்பொழிவுகளில் இந்த ஞானம் மனதைப் பக்குவப்படுத்துகின்றதென்பதை நாம் கவனித்தோம். உண்மை யின்னதெனக் காண விழைதலே முதல் பக்குவ நிலையாம். கூற்றுவன் வழங்குவதாய்க் கூறிய பொருட் செல்வம், நீண்ட ஆயுள் முதலியன அவன் வெறுத்தொதுக்கிய தன்மையைக் கூர்ந்து நோக்குங்கள்.

உண்மையறியவேண்டி ஏனைய எல்லாவற்றையுந்தியாகஞ் செய்யத் தயாராயிருந்தான். இம்மாதிரிதான் உண்மை வெளிப்படும். கூற்றுவன் மகிழ்ந்தான். பின்வருமாறு புகன்றான் "உலகவின்பம்நுகர்தற் கொருவழியும், உண்மையின்ப நுகர்தற்கு மற்றொரு வழியும் ஆக இருவழிகள் உண்டு. இவ்விரண்டில் உண்மை இன்பம் அடையும் வழியைக் கடைப்பிடிப்பவன் தான்ஞானியாவான். உலக வின்பங்களைக் கருதி யதனையடையும் வழி நாடுபவன் கேடுறுகின்றான் "நச்சிகேத! நீ இன்பங்களை விழைந்தாயில்லை. உன்னைப் புகழ்கின்றேன். உன்னைப் பலவழியில் உலக இன்பத்திற்குத் திருப்ப முயன்றேன். அவற்றை யெல்லாம் நீ பொருட் படுத்தவில்லை. நீ ஞானமே, இன்பம் நுகரும் வாழ்க்கையினும் சிறப்புடையது என்று கருதினாய். அறியாமை வாய்ப்பட்டு உலக இன்பங்களையே நுகர்ந்து கொண்டிருப்பவன் விலங்கினும் வேறானவனல்ல என்பதை நீ யுணர்ந்திருக்கிறாய். எனினும் அறியாமையில் மூழ்கி சிலர் இறுமாப்புக் கொண்டு தாங்கள் பெரிய ஞானிகள் என்று நினைத்துக்கொண்டு குருடன் குருடனை யிழுத்துச் செல்வது போலப் பல குருட்டு வழிகளைப் பின்பற்று கின்றனர். மண்ணாலாய சில கட்டிகளில் மயங்கி அறியாக் குழந்தைகள் போலிருப்பவர் நெஞ்சில் இவ்வுண்மை தோன்றுவதில்லை. அன்னார் இகலோக சாதனத்தையாவது பரலோக சாதனத்தையாவது அறிந்தாரில்லை. இம்மை மறுமை இருமையுமில்லை யென மறுத்து மீண்டும் மீண்டும் என்னாட்சிக்குள் வந்துறுகின்றனர். பலருக்கு இதைப்பற்றி யறிதற்கு சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. வாய்த்துக் கேட்பினும் அதை யுணருவதில்லை. இந்த வுண்மையைப்பற்றிப் பேசுபவர் மிகவும் நன்கு யுணர்ந்தவரா யிருந்தாலொழிய அவர் பேசுவதைப் பன் முறை கேட்பினும் கேட்டதைச் சிந்திப்பினும் கேட்போர் உளத்தில் உண்மை விளங்காது. நச்சிகேதா! வீண்வாதங்களால் உன் மனதைக் கெடுக்காதே! தூய நெஞ்சில் தான் இவ்வுண்மை சுடர் விட்டொளிரும். எவன் இலகுவாய்க் கட்புலனாகானோ, எவன் மறைந்துளனோ, எவன் நெஞ்சமெனுங் குகையின் கண் ஒளிர்ந்துளனோ, பழையோனாகிய அவன் புறக்கண்களுக்குப் புலப்படான். ஆன்மக்கண் கொண்டு பார்க்க விரும்புவோன் இன்பதுன்ப மிரண்டையும் விடுகின்றான். இவ் வுண்மை யுணர்ந்தோன் வீணான ஆசைகளைத் துறக்கின்றான்.

இந்த ஞானக் கண் பெற்றான் என்றும் உண்மையின்பந் துய்க்கின்றான். நச்சிகேதா! இதுதான் உண்மை யின்ப மெய்தவழி. அவன் புண்ணிய பாவங்களுக் கப்பாற்பட்டவன். கடமை கட

மையின்மைக்கும், வாழ்கின்றவை, இனி வாழ்பவை யாவற்றையுங் கடந்தோன். இதை யறிந்தோனே யறிந்தோன் ஆவன். எவனை யெல்லா மறைகளுந் தேடுகின்றனவோ, எவனைக் காண்பான் வேண்டி மாந்தர்கள் நானாவித தவங்கள் புரிகின்றனரோ, அவன் பெயர் கூறு கின்றேன். "ஓம்" என்று கூறுவர். என்றுமுள இவ் "ஓம்" பிரமம்ஆம். பிரமம் அழியாத் தன்மை யுடைத்து. இவ் வுண்மை யறிந்தோன் எதை விரும்பினும் எய்துவான். மனிதனிடையுள்ள ஆன்மா, ஒரு பொழுதும் பிறப்பது மில்லை; இறப்பது மில்லை. ஆதி யந்த மற்ற இப்பழையோன், உடல் சிதையுங்கால், சிதைக்கப் படவில்லை. கொல்பவன் தான் கொல்வதாய் நினைப்பதும் கொல்லப் படுவதாய் நினைப்பதும் தவறு. ஏனெனின், ஆன்மா தன்னைத் தானே கொல்லமுடியாது. ஆன்மாவைப் பிறர் கொல்லவும் இயலாது. அணுவுக்கணுவாயும், பெரும் பொருளினும் பெரிதாயும், எல்லாப் பொருளினும் யாவருடைய நெஞ்சினும் அது வதிகின்றது.

பாவ மற்றவர்கள் அவனருளால் அவனைக் காண்கிறார்கள். கடவுளை யறிதற்கு அவன் தண்ணருளும் பல காரணங்களுள் ஒன்று. உட்கார்ந்த வண்ணம் வெகு தூரஞ் செல்கின்றனன். படுத்தவண்ணம் எங்குமுளன். தூய தெளிந்த அறிவினர் தவிர வேறு யார் தாம் கடவுளை யறியற்பாலர்? உடலின்றி, உடலில் வதிந்து, தொடற்கரிதாய்,வெளித்தோற்றத்திற்குச்சம்பந்த முடையதாய், எங்கும் வியாபகமாயிருக்கும் ஆன்மாவை யுணர்ந்த பெரியார் துன்பத்தி னின்றும் விடுபடுகின்றனர். உயர்ந்த அறிவாலும், மிகுந்த கல்வித் திறத்தாலும், வேத முணர்ந்தமையாலும், இவ்வான்மாவை யடைய முடியாது. எவனை யான்மா தேடுகின்றதோ, அவன் ஆன்மாவை யடைகின்றான். அவனுக்குத் தன் மகிமையை ஆன்மா காட்டுகின்றது. எவன் இடைவிடாது தீச் செயல்களே புரிந்துகொண்டிருக்கின்றானோ, எவன் மனம் அமைதியற்றிருக்கின்றதோ, எவன் தியானிக்க வியலாதோ, எவன் சஞ்சலத்தோடு கூடிய நிச்சிய மில்லா புத்தி யுடையவனோ, அவன் நெஞ்சக் குகையின்கண் உள்ள ஆன்மாவை அறிதலும் முடியாது; அடையவும் முடியாது.

ஓ நச்சிகேதா! இவ்வுடல் ஒரு தேராகும். புலன்கள் அதிற் கட்டிய குதிரைகளாகும். மனம் கடிவாளமாகும். அறிவு தேரோட்டி யாகும். ஆன்மா அதில் ஊர்ந்து செல்பவன். ஆன்மா தேரோட்டியாய அறிவுடன் சேர்ந்து, பின் அதன் மூலம் கடிவாளமாய மனத்துடன் சேர்ந்து, பின் அதன் மூலம் குதிரைகளாய பொறிகளுள் சேர்ந்தால் அவன் நுகருபவன் என்றுரைக்கப்படுவான். அவன் தான் காண்பவனுவான். அவன் உழைக்கிறான்; செய்கிறான். எவன் மனம் கட்டுப்பாட்டில் இல்லையோ, எவனுக்குப் பகுத்துணருந் தன்மை யில்லையோ, ஓட்டுபவன் கைப்பட்ட பொல்லாக் குதிரைகள் போல் அவன் பொறிகளை யடக்கவொண்ணுது. ஆனால் எவன் பகுத்துணருந் தன்மை யுடையவனோ, எவன் மனங் கட்டுப்பாட்டிற் குட்பட்டதோ, ஓட்டுபவன் கைப்பட்ட நற் குதிரைகளைப் போல அவன் தன் புலன்களை யடக்கமுடியும். எவன் பகுத்தறிவுடையவனோ, எவன் அறிவு உண்மை யறிதலையே நாடுகின்றதோ, எவன் என்றுந் தூயனுயிருக்கின்றானோ அவன் உண்மையை எய்துகிறான். அதை யடைந்த பின் மறுபிறப்பற்றுப் போகின்றான். ஓ நச்சிகேதா! இதை யடைதல் மிகவுங் கஷ்டம். வழி மிகவும் தூரம். மிகக் கூர்ந்த மதிக்கண் உடையார் தாம் அதைப் பார்க்கமுடியும்; அறியவுங் கூடும். எனினும் அஞ்சற்க; எழுந்திரு. உழைத்திடுவாயாக. உன் நோக்கம் நிறைவேறும் வரை நிறுத்தாமல் உழைத்திடுவாய். இத்தொழில் ஒரு கத்தியின் முனையில் நடப்பது போலும் என்று பெரியோர் கூறுகின்றனர். எவன் பொறிகளுக் கப்பாற்

பட்டவனே, எல்லாப் பரிஸங்களுக் கப்பாற் பட்டவனே, உருவ மற்ற வன் எவனே, எல்லாவித ரஸத்திற்கப் பாற்பட்டவன் எவனே, எவன் மாறுத லற்றவனே, முடிவிலான் எவனே, அறி வுக்கும் அப்பாற்பட்டவன் எவனே, அழிவிலான் எவனே அவனை யுணர்ந் தால்தான் கூற்றுவன் வாயினின்றும் மாந்தர் தப்புவர்.''

இதுகாறும் கூற்றுவன், மாந்தர் அடையவேண்டிய லக்ஷியத்தை யெய் தும் மார்க்கத்தைப்பற்றிக் கூறியதைப் பார்த்தோம். உண்மைப் பொருளை யுணர்ந்தால்தான், நாம் இவ்வுலகில்படும் பல்வேறு துன்பங்கள், பிறப்பிறப்பு முதலியவற்றைப் போக்கமுடியும். உண் மைப் பொருள் என்பதுதான் என்னை? எது ஒருபோதும் மாறுதல் அடைதல இல்லையோ அதுவே ஆன்மா. அது உலகில் பரந்து நிற்கின்றது. ஆன் மாவை யுணர்தல் துர்லபம் என்று கூறப்படுகின்றது. அறிதல் என்பது தன் அறிவின் வலியால் உணர்தலன்று. அனுபவத்தில் கொணர்தல்தான் ஆன் மாவை யறிந்தவன் எனப்படுவான். இவ் விடுதலையைக் காண வேண்டு மென்று அடிக்கடி நாம் வாசித்திருக் கின்றேம். அதைப் புறக்கண்கள் கொண்டு பார்க்க இயலாது. மிகவுயர்ந்த அகக்கண் கொண்டுதான் அதைப் பார்க்க இயலும். சுவர்களையும் சுவடி களையும் பார்த்தல் புறக்கண்ணால்தான். ஆனால் உண்மை காண்பதற்கு மெய் யறிவு வேண்டும். இந்த ஞானத்தின் உண்மை யிதுவே. அவன் தூயனயிருத் தல் வேண்டுமென்று கூற்றுவன் கூறி னன். பார்த்தற்குரிய அகக் கருவியை மிகவும் உயர்ந்ததாகச் செய்வதற்குரிய மார்க்கமாகும். ஏனைய வழிகளையும் கூற் றுவன் கூறினன். ஆன்மா பொறிகளி னின்றும் விலகியிருக்கின்றான். பொறி கள் வெளிப்புறத்தைக் காண்கின்றன. ஆனல் ஆன்மா உள்ளேயே காணப்படு கின்றான். அகக்கண் கொண்டு கூர்ந்து விழையவேண்டும். இயற்கையில் காணப் பெறும் அழகிய பொருள்கள் எல்லாம் மிகவும் நன்றாயிருக்கின்றன. கடவுளைக் காணத்தக்க வழி யிதுவல்ல. அகப் புறம் நோக்க நாம் பழகுதல் வேண் டும். வெளிப்புறங் காண விழைதலைத் தடுக்கவேண்டும். பல மக்கள் நடமாடும் ஒரு வீதியில் நடந்துசெல்லுங்கால், பக் கத்தில் வந்துகொண்டிருக்கும் தோழன் பேசுதலைக் கேட்டல் இயலாது. ஏனெ னின் வண்டிகள் ஓடுவதால் உண்டாம் ஒலி, தோழன் பேசுவதைத் தடுக்கின் றது. அதிக சப்தத்தால் தோழன் பேசுவதைக் கேட்கமுடியவில்லை. அதே மாதிரி நம்மைச் சுற்றிலுமுள்ள உலகம் அதிக சப்தஞ் செய்வதால் நம் மனத் தையும் வெளியில் ஈர்த்துச் செல்கின் றது. ஆன்மாவைக் காணுதல் எங்ங னம்? இம்மாதிரி வெளியில் மனம் போதலை நிறுத்தல் வேண்டும். அது தான் உண்ணோக்கிப் பார்த்தல் என்று பொருள்படும். பின்னர்தான் உள்ளே யுள்ள பிரபுவின் மகிமை நன்கு விளங் கும்.

ஆன்மா வென்பதுதான் என்னை? அஃது அறிவுக்கும் அப்பாற்பட்ட தென்ப தறிந்தோம். இந்த ஆன்மா என்றுமுளதென்றும், எங்குமுளதென் றும், நீங்களும் நானும் இன்னும் மற் றுள்ள யாவரும் எங்குமுள்ளவர்கள் என்றும், ஆன்மாமாறுதலற்றதென்றும் நாம் உபநிடதத்தினின்றும் உணர்ந் தோம். இந்த ஸர்வவியாபி ஒன்று தானி ருக்கமுடியும். இரண்டு சர்வ வியாபியா யுள்ள பொருள்கள் இருக்கமுடியாது. எல்லையற்ற பொருள்கள் இரண்டிருத் தல் முடியாது. ஆகையால் உண்மையில் ஓரே பரமான்மாதான் உளது. நீங்களும் நானும் உலகத்தில் உள்ள ஏனையரும் வெளித் தோற்றத்தால் வேறுபடினும் உண்மையில் ஒன்றே? "ஓரே தீயானது உலகிடைப் புகுந்து பல்வேறு வழி களில் தோற்றுவதுபோல, ஓரே ஆன் மா, யாவரிடத்தும் உறைகின்ற ஆன்மா ஒவ்வொரு உருவத்திலும் தோற்றுகின் றது'' ஆனல், இந்த ஆன்மா குறை வின்றி தூயதாயிருக்குமாயின், உல கிடையுள்ள ஓரே பொருள், கெட்ட

சரீரத்திலும் நல்ல சரீரத்திலும் புகும் போது என்னுகின்றது? எங்ஙனம் ஒரு குறையுமின்றி யிருத்தல் இயலும்? "ஒரே சூரியன் ஒவ்வொரு கண்ணின் ஒளிக்குக் காரணமாயிருக்கிறது. எனினும் யாராவது ஒருவருடைய கண்களின் கெடுதியால் சூரியன் பாதிக்கப்படுவதில்லை" ஒருவன் மஞ்சக் காமாலையெனும் நோயுடையவனு யிருந்தால் அவன் பார்க்கும் பொருளெல்லாம் மஞ்சள் நிறமாய்த் தோற்று கின்றன. அவன் பார்த்தலுக்குக் காரணம் சூரியன். ஆனல் ஒவ்வொரு பொருளேயும் மஞ்சள் நிறமாக்காண்டல் சூரியனைப் பாதிப்பதில்லை. அதேமாதிரி இத்தனிப் பொருள், ஒவ்வொருவரிடத்தும் விளங்கினும், புறத்தின்கண் உள்ள நல்லவையாலோ கெட்டவையாலோ பாதிக்கப்படுவதில்லை. "நிலையற்ற இவ்வுலகில் மாறுதலற்ற அவனை எவன் அறிகின்றனே, ஞான வொளியற்ற இவ்வுலகில் ஞான வுருவாகிய ஒருவனை எவன் உணர்கின்றனே, பல பொருள் நிறைந்த இவ்வுலகில் ஒரு பொருளை யெவன் உணர்கின்றனே, அவ் வொப்பற்றவனைத் தன்னுள் எவன் காண்கின்றனே, அவனுக்கே முடிவிலா இன்பமுரித்து; வேறு யாருக்குமில்லை. அங்கே சூரியன் பிரகாசிப்பதில்லை. வான்மீன்களும் அங்ஙனே யொளிர்விடுவதில்லை. மின்னலும் மின்னுவதில்லை. தீயும் அவ்வண்ணமே. அவன் பிரகாசித்தால் எல்லாம் பிரகாசிக்கும். அவன் ஒளியால் ஒவ்வொன்றும் ஒளியுடையதாகின்றது. நெஞ்சத்தைத் துன்புறுத்தும் எல்லாப் பற்றுகளையும் ஒழித்துவிட்டால், அநித்தியன் நித்தியனுகின்றன். அவன் பிறகு பிரமத்தையெய்துகின்றன். நெஞ்சிலுள்ள குருட்டுத் தன்மையும் அதன் தளைகளெல்லாமும் அறுபட்டால்தான் அநித்தியன் நித்தியனுகின்றன். இதுதான் வழி. இத்தகைய ஆராய்ச்சி நமக்கு நன்மை பயப்பதாக. நமக்குணவாகுக. நமக்கு வன்மை யளிப்பதாக. நம்மிடையுள்ள சக்தியாக. ஒருவரை யொருவர் வெரு திருப்போமாக. யாவர்க்கும் சாந்தியுண்டாக."

இந்த மாதிரி முறை நீங்கள் வேதாந்த தத்துவத்தில் காணலாம். உலகில் வேறிடத்தில் காண்பதினின்றும் இந்த விஷயம் வேறுபட்டதா யிருக்கிறது. வேதங்களின் பழைய பாகங்களில், இதர நூல்களில் பரம்பொருளை யுணர முயற்சிக்கும் வழிபோலத்தான் பார்ப்பது வழக்கம். அந்த ஆராய்ச்சியும் வெளிப்புறத்தேதான். "ஆரம்பத்தில் என்ன இருந்தது? ஒன்றுமின்றியிருள் சூழ்ந்திருந்த ஞான்று இவற்றையெல்லாம் படைத்தது யார்?" என்ற வினக்கள் மிகப் பழைய நூல்களில் எழுந்தன. அப்பொழுது தான் உண்மை காண ஆரம்பித்தது. அவர்கள் முதவில் தேவர்களைப்பற்றியும் வேறுபல விஷயங்களைப் பற்றியும் பேச ஆரம்பித்தனர். அந்நாளில் ஆராய்ச்சியெல்லாம் வெளி விஷயங்களைப்பற்றி நின்று விட்டன. ஆனதால் அவர்கள் ஒன்றுங் கண்டுபிடிக்க வியலவில்லை. ஆனல் பிற்காலத்தில், வேதங்களில் படித்தது போல், ஆன்மாவை யறிய உள்நோக்கிப் பார்க்கவேண்டியதா யிருந்தது. வேதங்களில் இஃதொரு அடிப்படையான கருத்தாகும். நட்சத்திரங்களில் ஆராய்ச்சி செய்தல், இவ்வுலகில்வெளிப் பொருள்களில் ஆராய்தல், ஒன்றுக்கும் பயனில்லை. வாழ்க்கையின் நிலையைப் பற்றி யொன்றுந் தெரியாது, உள்ளே யமைந்து கிடக்கும் அற்புதயந்திரத்தை நன்ருய்ப் பிரித்துப் பார்க்க நேர்ந்தது. வையகத்தின் உண்மை தோன்றிற்று. நட்சத்திரமாவது சூரியனுவது அவ்வுண்மையை விளக்கவொண்ணுது. மனிதனைப் பாகுபடுத்திப் பார்த்தல்வேண்டும். சரீரத்தையல்ல. ஆனல் மனிதனிடமுள்ள ஆன்மாவை யிங்ஙனம் பார்த்தல் வேண்டும். அந்த ஆன்மாவில் அவர்களும் ஒன்று கண்டுபிடித்தனர். அவர்கள் கண்டதென்னை? சரீரத்தைத் தவிர, மனதையுந் தவிர, தன்னந்தனியா யிருக்கும் ஒருவன் இருக்கிறன் என்பதை யோர்ந்தனர். அவன் இறப்பதுமில்லை; பிறப்பதுமில்லை. தானே விளங்குபவனுகிய அவன் எங்குமுளன். ஏனெனின் உருவ

மில்லாதவன். எது உருவமற்றதோ, எது காலத்தாலும் இடத்தாலும் வரையறுக்கப்படாததோ, அது ஒரே யிடத்தில் இருக்க முடியாது. எங்ஙனம் இருக்கமுடியும்? நம் வழியாக யாண்டும் எங்கும் இருக்கின்றது.

மனிதர்கண் உள்ள ஆத்மா என்பது தான் என்னை? கடவுள் ஒருவர் உண்டென்றும், தவிர எண்ணிலா ஆன்மாக்கள் உருவ முதலியவற்றால் கடவுளினின்றும் வேறு பட்டுள்ளன என்றுங் கூறும் ஒரு கட்சி யிருந்தது. இதுதான் துவைதம் எனப்பெறும். இஃதொரு பழைய கொள்கை. எல்லையில்லாத் தெய்வத் தன்மையுடைய பொருளின் ஒரு பாகந்தான் ஆன்மாவென்று மற்றொரு கட்சி கூறிற்று. இந்தச் சிறு சரீரந் தன்னளவில் ஒரு சிற்றுலகமாயிருந்து தன்னிடத்தே மனதையும், ஆன்மாவையும் கொண்டு விளங்குவதுபோல, இப்பரந்த வுலகம் ஓர் உடலாகவும், உலக முழுதும் பரந்த மனதையும், ஆன்மாவையுங் கொண்டு விளங்குகின்றது. எங்ஙனம் இச்சரீரம் உலகமெனும் உடலில் ஒரு பகுதியோ, இம்மனமும் உலக முழுதும் பரவியுள்ள மனதில் ஒரு பகுதியாம். இஃதொரு கட்சி. உலக முழுதும் ஊடுருவி நிற்கும் ஆன்மா எல்லையற்றது. எல்லையற்ற பொருளையெங்ஙனம் தனித்தனிப்பாகங்களாய்ப் பிரித்தல் இயலும்? அதை எங்ஙனம் தகர்க்கமுடியும்? எங்ஙனம் வகுக்க முடியும்? எல்லையற்ற பொருளில் நான் ஒரு சிறு பாகம் என்று கூறுதல் கற்பனை சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது. ஆனால் அதை யூன்றிக் கவனிப்பார்க்கு அது குற்ற முடைத்தென்பது புலனாகும். எல்லையற்ற வொரு பொருளைப் பகுத்தல் என்பதென்னை? நாம் பிரிக்கவும் ஒன்று படுத்தவும்படியான ஒரு சாமானிய பொருளா? எல்லையற்ற பொருளை யொருகாலும் பகுக்க முடியாது. அஃது பகுக்க முடியுமேல் அதை யெல்லையற்ற பொருள் என்று கூறவியலாது. பின் முடிவுதான் என்னை? உலகமாய ஆன்மா நீதான். நீ யொரு பாசமல்ல. அதுவே நீ; நீயே கடவுளின் முழுவடிவு. பின் இவ்வேறுபாடுகள் என்னை? கோடிக் கணக்கான தனி ஆன்மாக்களைக் காண்கின்றோம். அவை தாம் என்னை? கதிரவன் எண்ணிலடங்கா நீர்த்துளிகளில் பிரகாசிக்கும் போது ஒவ்வொரு நீர்த்துளியினும் ஓர் உருவம், சூரியன் பிரதி பிம்பம் தோன்றுகின்றது. ஆனால் அவைகள் பிரதி பிம்பங்களே தவிர சூரியனல்ல. சூரியன் ஒன்றுதான். அதேமாதிரி ஒவ்வொருவனிடமும் காணப்பெறும் ஆன்மா கடவுளின் பிரதி பிம்பமே தவிர வேறல்ல. உண்மைப் பொருள் அந்த ஒரே கடவுள்தான். நாமெல்லாம் அங்கு ஒன்றுதான்.

ஆன்மாவைப்போல் உலகில் ஒன்றுதான் உள்ளது. அப்பரம்பொருள் என்பாலுள்ளது. உங்களிடமு முண்டு. அது ஒன்றே. ஒரே பரமான்மா பல்வேறு உடல்களில் பல்வேறு ஆன்மாக்களாகப் பிரதி பலிக்கின்றன. ஆனால் நமக்கு இது தெரியாது. நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு என்று நினைக்கின்றோம். பரமாத்மாவினின்றும்வேறு பட்டவர்கள் என்று நாம் கருதுகின்றோம். நாம் அங்ஙனம் நினைக்கும் வரை உலகில் துன்பம் நிலவும். இது ஒரு மயக்கமே. துன்பத்திற்கு மற்றொரு காரணம் அஞ்சுவதாகும். ஏன் ஒருவன் மற்றொருவனைத் துன்புறுத்துகின்றான்? ஏனெனில் தனக்குப்போதுமானபடி அனுபவிக்க முடியாதெனக் கருதுகின்றான். தன் பாலுள்ள பணம் ஒருகால் போதாதென்று அஞ்சுகின்றான். அதனால் பிறரைத் துன்புறுத்தியவர்கள்பா லுள்ளவற்றைக் கொள்ளை கொள்கின்றான். உலகில் ஒரே பொருளிருப்பின் பயம் எங்ஙனந் தோன்றும்? ஓர் இடி யென் தலைமீது விழுந்தால், அவ்விடியும் நானே. ஏனெனில் உலகில் நான் ஒரே பொருள்தான். ஒரு நோய் வரின் அதுவும் நானே. ஒரு புலிவரின் அதுவும் நானே. இறப்புவரின் அதுவும் நானே. பிறப்பு இறப்பு இரண்டும் நானே. உலகில் இரண்டுண்டு

என்று எண்ணும்போது பயம்தோன்று கின்றது. "ஒருவருக்கொருவர் அன்பாயிரு" என்று அடிக்கடி பெரியவர்கள் போதித்துள்ளனர். எதற்காக அந்தக் கொள்கை பரப்பப் பெற்றது? அதன் பொருள் இதுவே. நான் ஏன் ஒவ்வொருவனிடத்தும் அன்பாயிருத்தல் வேண்டும்? ஏனெனில் அவர்களும் நானும் ஒன்றுதான். நான் ஏன் என் சோதரனிடம் அன்பு காட்டவேண்டும்? ஏனெனில் அவனும் நானும் ஒன்றுதான். அங்கு இவ்வொற்றுமையுள்ளது. வையத்தின் ஒற்றுமையுள்ளது. நமது காலடிகளில் ஊர்ந்து செல்லும் புழு முதல் மிக வுயர்ந்த பொருள்களிறுதியாகவுள்ள எல்லா வுயிர்களும் பல்வேறு உடல்கள் பெற்றுள்ளன. ஆனால் ஆன்மா ஒன்றே. எல்லா வாய்களின் வழியாய் நீ உண்கின்றாய். எல்லாக் கைகளாலும் நீ வேலை செய்கிறாய். எல்லாக் கண்களாலும் நீ காண்கின்றாய். கணக்கற்ற சரீரங்களெல்லாம் சௌக்கியமாயிருக்கும்போது நீ சௌக்கியமாயிருக்கின்றாய். கணக்கற்ற சரீரங்கள் உடல் மெலிந்து வாடுங்கால் நீயுந் துன்புறுகிறாய். இவ்வெண்ணந் தோன்றுங்கால் அதை நாம் உணர்கின்றோம்; பார்க்கின்றோம். பின் துன்பம் ஒழிகின்றது. அச்சமும் நீங்குகின்றது. நான் எப்படியிறக்கின்றேன்? என்னைத் தவிர வேறொன்றுமில்லை. அச்சம் ஒழிகின்றது. ஒழிந்த பின்புதான் பூரண மகிழ்ச்சியும் பூரண அன்பும் ஏற்படுகின்றன. யாவரிடத்தும் இரக்கம், யாவரிடத்தும் அன்பு, மாறுதல் அடையாத மகிழ்ச்சி, எல்லாவற்றையும்விட மனிதனை உயர்த்துகின்றன. அந்நிலைக்கு மாறுபட்டநிலை ஏற்படுவதில்லை. துன்பந் தொடருவதில்லை. ஆனால் இவ்வுலகில் சிறிதளவு உண்ணலும் பருகலும் என்றுமுள்ள நிலைக்குமாறுபட்ட நிலையைக் கொணர்கின்றன. இவ்வையம் வேறு, நான் வேறு என்றும், கடவுள் வேறு தான் வேறு என்றும் எண்ணுகின்ற துவைத புத்திதான் இத்தனை துன்பத்திற்கும் காரணம்.

"நானே அவன், நான் இவ்வுலகில் ஆன்மா, நான் என்றும் மகிழ்ச்சியுடையன், என்றும் சுதந்திரன்" என்கிற நிலையடைந்ததும் உண்மை யன்பு தோன்றுகின்றது; அச்சம் மறைகின்றது. எல்லாத் துன்பங்களும் ஒழிகின்றன.

காவிரியின் கவின்

[திரு. இ. சிவகுருநாதன்]

சோலைகளை விரிக்கும் ஆறு ஆகிய காவிரி ஆற்றின் அழகு என்பது பொருள்.

காவிரிக்குப் பொன்னியாறு எனவும் பெயருண்டு. பொன் மணலைக் கொழிப்பதால், அப்பெயர் பெற்றது போலும். இதனைத் "தண்டமிழ்ப்பாவை" எனப் புலவர் போற்றுவர்.

காவிரியாறு, தன் பெயரினாலே, தன் வளத்தைத் தெரிவிக்கின்றது. சோலைகளை விரிக்கும் யாறு ஒன்று மற்றைப் பொருள்களையும் மாண்புற விளக்கும்; மிக்க வளங்கொண்டும் மிளிரும். இதில் ஐயமில்லை.

மிக்கவளங்கொடுக்கும்யாறு, மேதக்க கவின்கொண்டு இலங்குவதும் இயற்கையே. இயற்கை யழகு இனிய இன்பம் நல்கும். அவ்வின்பம் உடலை நன்றே ஓம்பும்; வாழ்க்கையைச் செம்மைப் படுத்தும். ஆதலின் அவ்வழகை ஆய்ந்து அறிவாம்.

காவிரியின் கவின் கண்ணுற் கண்டு மகிழ்வுறுதற்கு அல்லது, வாயாரப் புகழ வாய்ப்ப தொன்றில்லை. காவிரி நங்கை ஒருவகை இருவகையிலா தன்

கவினைக் காட்டுகிறாள்? இல்லை. பல வகையில் அவள் தன் கவினைக்காட்டிக் காட்சி அளிக்கிறாள். ஆதலின் பலவகையிலும் அவள் கவினை ஆய்வாம்.

காவிரியின் அமைப்பழகு, கரையழகு, நீரோட்டத்தி னழகு, காலை மாலையழகு, ஆகிய இவ்வழகை ஆய்ந்து, அதனலைடையும் பயனையும், அவ்யாற்றைப்பற்றிக் கூறிய அறிஞர்களின் செம்மொழிகளையும், அது சிறப்பாக நம் கல்லூரிக்குச் (அரசர் கல்லூரி; திருவையாறு) செவிலித் தாயாய சிறப்பையும் ஆய்ந்து அதனை வாழ்த்துவாம்.

காவிரியின் அமைப்பழகு

அன்பர்களே! "ஆறில்லாவூருக்கழகு பாழ்" என்ற தொன்மை மொழியை உன்னுங்கள். ஆற்றின் மேன்மை தெற்றென விளங்கும். அதற்குச் சான்றாக ஆறுள்ள ஓர் ஊரையும், ஆறில்லா ஓர் ஊரையும் சீர்தூக்கிப் பாருங்கள். ஆறுள்ள ஊர், அழகுடன் இலங்குவதை யறியலாம். அழகுக்கு மட்டுமா ஆறு? இல்லை. பின் எற்றுக்கு? நாட்டை வளம்பெறச் செய்வதற்கு மன்றோ! "நாடா வளத்தது நாடு" என்ற தெய்வப் புலவர் திருமொழியை உன்னுங்கள். நாடா வளந்தருவதற்கு நற்றுணையாவது யாது என எண்ணுங்கள். அதற்குத் துணையாவது ஆறு என அறியலாம்.

இங்ஙனம், நாடாவளமும் நல்லழகும் நல்கும் ஆறு, நம் நாட்டிடைப் பலவுள. அவைகளுள், செந்தமிழ் நாட்டைச் செம்மைப்படுத்தி, சீர்பெறச் செய்வது காவிரியாறு. சோழ வளநாடு சோறுடைத்தாயது காவிரியின் பயனைக் கவர்வதாலன்றோ? ஆதலின் அவ்யாற்றின் தோற்றம், ஓடுமிடம் முதலியவற்றை உணர்வாம்.

இவ்யாறு யாண்டுப் பிறக்கின்றது? எஞ்சாத சீர்த்தியுடன் இலங்குவது குடகுமலை. அது கடகளிறு முதலிய காட்டுவாழ் விலங்குகளையும், சந்தனம், தேக்கு முதலிய சிறந்த மரங்களையும் ஏலக்காய் முதலிய இன்பண்ட விளைவுகளையும், துளக்கலாகா நிலையினையுந் தோற்றத்தினையும் உடையது. அது தான் காவிரியை ஈன்ற தாய்.

காவிரியாறு தண்மையொடு மென்மையும், அமைதியொடு அழகும், உயிர்களைக் காக்கும் வன்மையும் உடைத்தாகி இலங்குவதால் நங்கையெனற்குத் தக நலமுடன் வளர்கிறாள். ஆதலின் இவ்யாற்றை நாம் நங்கையென அழைப்போம்.

உருவுங் குலனும் நலனும் ஒருங்கமைந்த நங்கை ஒரு தலைவனை நாடிச் செல்வதும் தக்கதேயாகும். அதுபோல நங்காவிரியாம் நங்கையும், தன் பெருமைக்குத் தக்காங்கு, கடலாம் கணவனை நாடிச் சென்றடைகிறாள். காவிரி நங்கை, கடலுக்கு எவ்வழியாகச் செல்கிறாள்? தமிழ் நானிலத்தையும் நலமுடன் கடந்து செல்கிறாள். அவைகளைக் கடக்குமாறு யாங்ஙனம்? முதலில் நறுஞ்சுனைகள் பலவுடைய குறிஞ்சியிற் றோன்றுகிறாள்; குடகுமலையிற் கடகட வென்று குதிக்கிறாள்; பின் முல்லை நிலத்தை நண்ணுகிறாள்; ஆங்கு ஒல்காவளம் நல்கி மருதத்தை நோக்குகிறாள்; ஆண்டுப் பல்பெரும் வளனைப் பல்கச் செய்து நெய்தல் நிலத்தை நோக்கிச் சென்று நெடுங்கடலொடு கலக்கிறாள்.

இக்காவிரி நேராகக் கடலுக்குச் செல்கிறாளா? இல்லை. பின் எப்படிச் செல்கிறாள்? மைசூர் மன்னவன் வணக்கங்கொண்டு மட்டற்ற உயிர்களை ஓம்புகிறாள்; கொள்ளிடமாகப் பிரிந்துகோடிக் கணக்கான மக்களைக் காப்பாற்றுகிறாள்; இன்னும் பற்பல பெயர்களுடன் பல ஆறுகளைத்தன்கண் தோற்றுவிக்கிறாள்.

இங்ஙனம் இவ்வன்னை, தன்னாலும் தன் மகவாலும் மருமக்களாலும் பேராலும் பெரு நன்மையைச் செய்து நம் செந்தமிழ் நாட்டைச் செழிக்கச் செய்கிறாள்.

இங்ஙனம் இவ் யாறு நலன் நல்கிக் கடலொடு கலக்க வழி காட்டியவன்

யாவன்? காந்தமன் என்னும் காவலன் என்பர் ஆராய்ச்சி அறிஞர். மேலும் இவ்வான் யாறு வரம்பு கடவா வண்ணம் கரை கட்டியவன் கரிகாற் பெருவளத்தான் என்பர். இவ்வரசர்கள் காவிரிக்கு அமைத்த வடிவு யாது என்பதையும் அறிவாம். அவள் வடிவு மூந்நூற்று முப்பது மைல் நீளம். மலையடியில் அவள் பாட்டெனப்பரந்து வருகிறாள்; பின் அலைகடலொடு குறுகிக் குறுகிக் கூடுகிறாள்; இடையில் வளைந்து வளைந்து வருகிறாள். இஃது ஆற்றின் இயற்கையன்றே! இங்ஙனம் இவ்வமைப்பின் அழகு அளவிடற் பாலதன்று.

காவிரியின் கரை யழகு

இனி, இங்ஙனமமைந்த காவிரிக் கரையின் கவினைக் காண்பாம். காவிரிக்கு இரு பெருங்கரைகள் உள்ளன. ஆண்டு ஆண்டுச் சோலைகள் மிக்கு விளங்குகின்றன. சோலைகளின் கவினைச் சொல்லல் இயலாது. சோலை இல்லையேல், பண்டைப் பனுவல்களில் உள்ள பாடல்களிற் பல பாடாது விடப்பட்டிருக்கும். சொல்லேரு உழவர்கள் சோலைச் சிறப்பையே முன்னணியில் சொல்லிப் போகின்றார்கள். இக் காலத்தும் செயற்கைச் சோலைகள் ஏற்படுகின்றன. அவை எற்றுக்கு ஏற்படல் வேண்டுமெனின், சோலைகள் காட்சிக்கு இனிய; எண்ணத்திற்கு இனிமைய; உடல் நலத்திற்கேற்றன; நறுங் காற்றுக்குப் பெருந்துணை யாவன; இளங் குழந்தைகள் விளையாடற் கேற்றன; இன்னும் பலவற்றிற்கும் ஏற்புடையன. ஆதலின் அவற்றினை மக்கள் உண்டாக்குகிறார்கள்.

பண்டைத் தமிழ் மக்களைப் பாருங்கள். அவர்கள் சோலைகளாலுற்ற பயன் யாது? மகளிர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடினார்கள். அன்பொத்த காதலர் இன்புடன் கூடி மகிழ்ந்தனர். நறுங் காற்றைப்பெற்று அவர்கள்பெருவாழ்வு நடாத்தினார்கள்; சோலைகளிலுள்ள பறவைகளின் இனிய ஒலி கேட்டு மகிழ்ந்தார்கள். இவைகளினால் சோலைகளின் பெருநலம் புலப்படுகின்றதல்லவா? இக்காவிரி யன்னையும் இயற்கைச் சோலைகளை இரு புறத்திலும் உண்டாக்குகிறாள். அதனால் அனைய நலனையும் அளிக்கிறாள். அவ்வியற்கைச் சோலையின் அழகு எழுதுந் திறத்ததன்று. கண்ணாற் கண்டு களிப்புறுவதற்கேற்றது. ஆயினும் என்னறிவிற் கெட்டியதை எடுத்துரைக்கிறேன்.

கரையிலுள்ள கழனிகள் தோறும் வாழைகள் வளர்ந்திருக்கின்றன. இங்ஙனம் தழைத்து வளர்ந்த வாழைகள் காய்ந்த சருகினையும், பச்சைக் குருத்தினையும் தம் பாங்கர்கொண்டு இலங்குகின்றன. இதுஉலகவாழ்க்கைஇன்பமும் துன்பமும் இணங்கியது என்பதை எடுத்துக் காட்டுவதுபோல் தோன்றுகிறது. பெரிய வாழைகளைச் சுற்றிலும் சிறு வாழைகள் செறிந்திருக்கின்றன. குலைகளை யுடைத்தாகிய வாழைகள் பல நிலைத்திருக்கின்றன. அகன்று நீண்ட இலைகளை அவைகள் தம்மகத்தே கொண்டு இலங்குகின்றன.

செந்தளிரீன்று,பசுந்தழை தழைத்து வெண் பூ பூத்து, பழுப்புத் தழையோடு செழித்து வளருந் தேமா, குடைபோல் குவிந்து, வானுற வளர்ந்து மெல்லிய காற்றை வீசும் மேன்மைதான் என்னே! என்னே!!

ஓங்கி வளர்ந்த தெங்கின் தோற்றத்தையும், நெருங்கி வளர்ந்த மூங்கிலின் பச்சையையும்என்னென்றெடுத்துரைப்பது! இங்ஙனமே இன்னும் பல பச்சை மரங்களைத் தன் பாங்கர் கொண்டுளது. இப்பச்சை மரங்களிடையில், காவிரி பரந்து செல்லுதலைப் பார்ப்பவர்க்கு, அவ் யாறுங் கரையும் அழகை அளியாதிருக்குங்கொல்? கண்டவர் மனதைக் கவராதிருக்குங் கொல்?

கரையில் பச்சை மரங்கள் மட்டுமா கவினைச் செய்கின்றன? இல்லை. பின் இன்னும் எவை கவினைச் செய்கின்றன. செல்வர்கள் அமைத்துள்ள திருமாளிகைகள். அம்மாளிகைகள் பல ஓவியங்களமைந்துமிளிர்கின்றன.அவைகள்

கட்டியவர்களுடைய நுண்மைஅறிவைப் புலப்படுத்துகின்றன; காவிரியின் பெரு வளத்தை அறிவிக்கின்றன. பூந்தோட்டங்கள் பல பொருந்தி யிருக்கின்றன. அவைகள் பல நிறப் பூக்களைக்கொண்டு பார்ப்பவர்க்கு அழகைச் செய்கின்றன; மணம் பல விரித்து மகிழச் செய்கின்றன.

இனி இங்ஙனம் கவினுற அமைந்த கரையினுட்பட்டு ஓடும் நீரினது அழகை நோக்குவாம்.

காவிரி நங்கை மலையினின்றும் வெள்ளிய நிறத்தோடு விரைவுடன் வீழ்கின்றாள்; நிலத்தியல்பால் நீரைத் திரித்துக் கொண்டுவருகிறாள்; விரைவுடன் இழிவதால் வெள்ளியநுரை பலவற்றை விளைத்துக்கொண்டு வருகிறாள்; மலையினுள்ள வான் பொருள்களை வாரிக்கொண்டு வருகிறாள்; விளை பொருள்களை வளம் பெற விளைத்தற்குரிய வண்டல்களையுங் கொண்டு வருகிறாள். இங்ஙனம் வருமவள் விரைவுடன் சென்று வேலையில் விழுவாள். இடையறாது ஓடுங் காலத்து எண்ணற்ற பொருள்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறாள். இங்ஙனம் காட்டும்போதே அவள் கவினையுஞ் செய்கிறாள். அவள் காட்டுங் கவினையுங் கட்டுரைத்து ஆராய்வாம்.

அவள் சலசல என்ற ஒலியை ஓய்ந்து ஓய்ந்து உண்டாக்கி ஓடுகிறாள். ஏன் இங்ஙனம்ஓடுகிறாள்? நம்மை நோக்கி, மாண்பு மிக்க மாணவரீர்! நீவிர் ஓயாது படியாதீர்கள்! ஓய்ந்து ஓய்ந்து படியுங்கள்; 'ஓயாது படிப்பின் உடலுக்குக் கெடுதி' என்ற உண்மையை உணர்த்தவன்றே அங்ஙனம் அழகு செய்து காவிரி ஓடுகிறாள்.

காவிரி கிழக்கு நோக்கி ஓடுவாள்; மேற்கு நோக்கி ஓடாள். இது எதைத் தெரிவிக்கின்றது? சென்ற நாள் மீளா! கொன்னே காலங்கழியன் மின்! கால நேமி விரைவிற் செல்கின்றது. நன்றே செய்யுங்கள். நன்றும் இன்றே செய்யுங்கள். இன்றும் இன்னே செய்யுங்கள் என்பதை எடுத்து இயம்புவாள் என்றெல்லாந் தெரிவிக்கின்றது.

காவிரியில் இன்று ஓடிய நீர் நாளை ஓடாது. புதிய புதிய நீர் இடையறாது ஓடும். புதிய பொருள்களையும் விளைவிக்கும். இஃது உலகம் ஒரு நிலையில் நில்லா. (பழைய நெறியிலேயே நில்லா); ஒவ்வொருநாளும் புதிய தோற்றங்காணும்; புதிய வாழ்க்கை முறை கோலும்; புதிய திட்டத்தை ஆக்கும்; புதிய நம்பிக்கை பிறக்கும்; மகனைப் புதிய மகனாக்கும்; கடந்த தவறுகளினின்றும் புதியவனாகத் தோன்றலாம்; புதிய கொள்கைகொண்டு வலியும் புகழும் பெறலாம் என்பதைப்புலப்படுத்துகிறது.

ஆழ்ந்து படியுங்கள்; மேலொடு படியாதீர்கள்; அறிவு பெற இயலாது; என்பதை அறிவிப்பான், நிலத்தின் மேல் நங்கை ஓடுவாள். ஆழ்ந்த பூமியில் தன்நீரை ஊற்றின்மூலமாக அவள் உட்செலுத்துகிறாள்; அது நிறைந்தவுடன் பூமியின்மேல் ஓடுகிறாள்; மேனீர் அற்றவிடத்தும், கீழ் நீரால் தொண்டு செய்கிறாள்.

'அடக்கமுற்று அறத்திற்கு வணங்கியோர் அகமகிழ்ந்து வாழ்வர்; செருக்கி நின்றோர் தீமையுறுவர்' என்ற செம்மொழிகளைத் தெரிப்பாள் போன்று காவிரி தன் வரவு நோக்கி வணங்கிய சிறுகொடிகளைச் செழிக்கச் செய்கிறாள்; வணங்கா மரங்களை வேரற வீழ்த்தி வதைக்கிறாள்.

அறிவு நிறைந்த சான்றோர் அடக்கமுற்ற வாழ்க்கை நடாத்துவர். அஃதே போல் காவிரி கல்வி சான்ற கற்புடையாள்போல், நிறைந்த நீருடன் செல்லுங்காலத்து அடக்கமுடனும், அமைதியுடனும், விரைந்து செல்லுதலைநோக்கி விளங்குகிறாள். குறைந்த அறிவுடையர் ஒரு கொள்கையை விரைந்து பற்றலும், அங்ஙனே தள்ளலும் போல், குறைந்த நீருடைத்தாகிய காலத்து, விரைந்து சென்று காவிரி வேலையில் விழுகிறாள்.

சாந்துணையும் தீயவே செய்வாரையும் ஆந்துணையுங் காத்தல் அறிவுடை

யர் செய்கையன்றே. அதுபோலக் காவிரி தன் மாட்டு சாக்கடை நீர் கலத்தல் முதலிய கெட்ட செய்கை செய்வாரையும் ஆந்துணையும் காக்கிருள். அக்குற்றங்களைத்தன் நறுநீரால் அவள் மாற்றுகிருள்.

" நண்ணிய கயவர் செய்யும்
நலிவினை ஒறுத்தொறுத்துப்
புண்ணியர் துலங்க மெய்திப்
புகழினை அடைவரன்றே"

அது போல காவிரியும் புகழினை அடைகிருள்.

" சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே"

என்பது முன்னோர் கூறிய பொன்னேர் மொழி யன்ரூ! அம்மொழிப்படி, தன் மாட்டுப் பிழை செய்வாரை ஒருது நோய் முதலியவற்ருல் ஒறுக்கவுஞ் செய்வள். தீநெறி செல்லுவாரை ஒறுத்து நன்னெறி செலுத்தலும் அறமன்ரூ ! அவ்வறத்தை அம்மையுஞ் செய்கிருள் போலும்.

பொன் மண் கொழிக்குங் காவிரி, பச்சை மணி கொழிக்கும் பண்புடையாள் போன்று, கால்வழியாகக் கழனியிற் சென்று பச்சைப் பயிர்களைப் பாங்குடன் கொழிக்கிருள்.

எல்லா உயிர்கள் மாட்டும் அன்புடையார் குற்றமுள்ள தீவினையாளரிடமும் அன்புகொண்டு அவரையும் ஓம்புவது போல, வான்பொருளை வாரிவருவாள் இழிபொருளையும் ஈர்த்து வருகிருள்.

ஆற்றில் தவறி விழுவோர்க்கு, கைப்பிடியாக நின்று கரையேற்ற, கரைக்கண் மிக்க புற்களைக் கொண்டு காவிரி மிளிர்கிருள். என்னே ! அம்மை அறிவுறுத்தும் ஆற்றல்! இதைப்பாருங்கள். புற்களும் பிறர்க்கு உதவிஉற்றுழிஉதவுகின்றன. அதுபோல ' நீங்களும் பிறருக்கு உற்றுழி உதவுங்கள். பெருந்தகைமையொடு பிறர்க்குதவி வாழுங்கள் ' என்ற வான் பொருளை அம்மை காட்டுகிருள்.

இளைஞர் இன்பொடு குதித்து விளையாடவும் உடற் பயிற்சிக்காக, நீந்தி நீராடவும், நிறைந்து நீரொடு செல்கிருள்.

கடலைக் காணும் முயற்சியொடு செல்வாள் இடையே எவ்வளவு தடை நேரினும், அதைத்தாண்டிக் கடலொடு கலக்கிருள். இது "முயற்சி திருவினையாக்கும்" என்பது போன்ற முதுமொழிகளை மொழிவாள் போன்று இருக்கிறதல்லவா ?

'வீணே உண்டு உறங்காதீர்கள். உறுதிப் பொருளைத் தேடுங்கள். மக்கள் வாழ்வை மாண்பெறச் செய்யுங்கள். ஏனெனில் இளமை நிலையாதது' என்று இயம்புவாள் சுழி சுழித்துக் காட்டி உடனே மாற்றிக்கொண்டு காவிரிநங்கை ஓடுகிருள். அவள் செல்வ நிலையாமையைச் சொல்லுவான் மேடும் மடுவுமிட்டு மிளிர்கிருள். உயர்ந்த வாழ்வும் ஊழ்வலியால் ஒழியும் என்பதை உணர்த்துவாள், ஒளிபெற வளர்ந்திருந்த ஒரு பெருமரத்தினை வீழ்த்தி விரைவுடன் செல்கிருள். இங்ஙனம் பான்மை பெறப் பல் பொருள்களையும் உணர்த்திச் செல்வது ஒரு பெருங் கவினைக் காட்டுகிற தல்லவா?

காவிரி நீரற்ற காலத்துக்கவினை யிழக்கின்ருள். ஏன்? மக்கள் செய்யும் குற்றத்தினுல். அவள் மாட்டு யாதொரு குறையும் இல்லை. ஆதலின் அவள் மாட்டுக் குற்றம் செய்யன்மின் ; அவள் கவினைக் காண்மின் ! கவினைக் காண்மின் ; களிபேருவகை கொண்மின்.

இனி இங்ஙனம் அழகொடு ஓடும்நீர், காலையும் மாலையும் காட்டும் கவினை நோக்குவாம்.

காலையில் செஞ்சட்டைப் போர்த்த செஞ்ஞாயிற் ருளியும், வானிடைச் சிதறுண்டு கிடக்கும் முகிலின் கருமையும், ஆற்றங்கரைச் சோலைப் பச்சையும் காண்பார்க்குக் கவினைச் செய்யும். அதுபோது தண்ணீரிற் படிந்து வரும் தண்மை மிக்க சோலையில் காற்று, உடலுக்கு இன்பம் கொடுக்கும். பறவைகளின் ஒலிகள் செவிக்கு இன்பம் ஈனும்.

இங்ஙனமே மாலைக்கவினையும் நோக்கு வாம். காலைக் கவினினும் மாலைக் கவின் சிறந்து விளங்கும். நீல நிறவானம் செஞ்சட்டை அணிந்ததே போன்று செக்கச் செவேலென சிவந்து விளங்க வும், செஞ்சுடர்க் கதிரவன், சிறிது சிறிதாக மேற் றிசையில் மறையத் தொடங்க, பறவைகள் பல இன்னிசை பாடி இன்புற, பூம்பொழிலிடைப் புகு ந்து மெல்லென அசைந்து வந்த தென் றல், காவிரி நீரொடு கலந்து வீசுதல் ஆராப் பேரின்பம் அளிக்க வல்லது. அதுகாலை பச்சைப் புல்லின் மெச் சத்தக்க நிறம் பாராட்டுந் தகைத்து. மேட்டுத் தவளையின் பாட்டொலி, தண் ணீர்த் தவளையின் தாளவொலி, மழைக் காலத்து மடாத்தவளையின் முரசொலி இவைகள் சேர்ந்து இசைக் குழுவின ரைப் போன்று இசைபாடி, செவியின் பம் சிறக்கச் செய்கின்றன. வெண்மணி போன்ற விண்மீன் நடுவே தண்மதி தவ ழும் தோற்றமும், வெண்ணிலவின் சாயல் தண்ணிடைக் காணுந் தன்மை யும், காவிரியின் சலசலவென்ற ஒலியும், நள்ளென்ற இருளொலியும் எல்லாங் கலந்து இன்பம் நல்கும். இத்தகைய எழில் எழுதுந் திறத்ததோ ?

இனி, இக்காவிரியின் பயனை ஆய் வாம். வெறும் அழகு மட்டும் இருப் பின் பயன் என்னை ? அழகொடு அரு ளும் பெரும்பயனும் இருப்பினன்றோ சிறக்கும். ஆதலின் அதன் பயனை ஆய்வாம்.

காவிரி தன் பயனை அளிக்குங்கால் இன்னோரென உன்னாள்; இனையரென்று நினையாள் ; எமரென்று எண்ணாள் ; பிறர் என்று வெறாள் ; நல்லா ரென நோக்காள் ; அல்லாரென அகற் றாள். 'எல்லோரும் ஒரு குலம். எல் லோரும் என் மகவு' என எண்ணுவள்; புல்லென நினைத்து அல்லது செய்யாள்; தேமாவெனச் சிறப்பையுஞ் செய்யாள்; சிங்கமெனவும் எண்ணாள் ; சிற்றெறும் பெனவும் ஒறுக்காள் ; இலங்கு உடல் அனைத்தும் ஈசனில் என்பாள்; எறும்பு முதலா இறைவன் ஈறா எனைத்துயிர்க் கும் நன்மை செய்கிறாள்.

இங்ஙனம் காவிரி சோழநாட்டை வளநாடு ஆக்குகிறாள்.

'சோழ வளநாடு சோறுடைத்து' என்ற சிறப்பு மொழியைத் தோற்று வித்தவள் காவிரியன்றோ ! 'உண்டி முதற்றே உலகம்' என்பர் உயர்ந்தோர். உண்டியில்லையேல் உடல் இயங்காது. உடல் நலம்பேணும் உண்டியைக் கொடுக்கிறாள் அன்னை. உண்டிமட்டுமா கொடுக்கிறாள் ? இல்லை. உடல் நலத் திற்கு வேண்டிய மருந்தையும் அவள் கொடுக்கிறாள். எங்ஙனமெனில், இயற் கை வழி பிறழ்ந்தோர் நோயுறுவர். அந் நோயைமீண்டும் போக்க வல்லது இயற் கைப் பொருளே. இயற்கை யெல்லாம் நிறைந்துள்ளது இவ்வன்னைபிறப்பிடம். ஆண்டுப் பச்சை மூலிகைகள் படர்ந் திருக்கின்றன. அம்மூலிகைகளினால், பெரும்பயனை எய்தல்கூடும். அம்மூலி கையிடையிலே, நம்மன்னை மூழ்க் கிறாள். ஆண்டு மூழ்ப்பவனுக்கு அம் மூலிகையின் குணம் பொருந்தியிருக்கு மன்றோ ? "தந்தை யறிவு மகனறிவு" என்பதும் முன்னோர் மொழியன்றோ ? அக்குணங்கொண்ட காவிரி தன்மாட்டுக் குளிப்பவர் நோயைக் கெடுப்பாள். இவற்றைக் கருதியே போலும் காவிரி மூழ்குதலை முன்னோர்கள் கட மையுள் ஒன்றாகச் செய்தார்கள். இக் காலஅறிஞர்களும் இதைப்பற்றிச்சிறப் பித்துச்சொல்லுகிறார்கள். இவள் அளிக் கும் பயன்களை முன்னரே ஆய்ந்தாம்.

இனி, இக்காவிரி ஒரே நிலையில் பய னளிக்கிறாளா, கால நிலைக்கு ஏற் பப் பயனளிக்கிறாளா என்பதைப் பார்ப்போம். பார்ப்பதற்குத் துணையா வது பண்டைப் பாவலர் மொழிகளே ஆதலின் அவைகளை ஆராய்வாம்.

சிலம்பின் கதையிசைத்த சேரர் பெருமான் சிறப்பிப்பதை நோக்குவாம். 'விளை பொருள்களை அளவிலாது விளைக் கும் வளமுடையது. உலகத்து உயிர் களையுங் காக்கும் அரசுதலைக் கொண்

டது. கடல் வளனுக்கு எதிரியது' என்பதை முறையே,

"தாங்காவிளையுட் காவிரி நாடு"
"மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்"
—சிலப். 6-ம் காதை 30-ம் அடி.

"ஆயிரத் தோரெட்டரசு தலைக்கொண்ட
தண்ணறுங் காவிரி"
—சிலப். 5-ம் காதை 14, 15-ம் அடி.

"குடமலைப் பிறந்த கொழும்பல்குருர
மொடு கடன்வள னெதிர்"
—சிலப். 10-ம் காதை 166-ம் அடி.

என்று சிறப்பித்து அதனை வாழ்த்துகிறார். அவர் வாழ்த்தும் முறையைக் கவனியுங்கள். காவிரியின் கவின் தெற்றெனப் புலப்படும்.

"வாழியவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்குந் தாயாகி
யூழியுய்க்கும் பேருதவி
யொழியாய் வாழி காவிரி"
—(7- கானல் 27)

என அவர் வாழ்த்துகிறார்.

இனிக் கல்வியிற் பெரிய கம்பரை நோக்குவாம். அவர்கங்கைக்கு உவமையாகக் காவிரியைக்கொடுத்து, தன்னாட்டுப்பற்றினை நனிவிளக்குகிறார்.

"பொங்கு கொன்றைசர்த் தொழுகலாற்
பொன்னியைப் பொருவும்
கங்கை யென்னும் அக்கரை
பொரு நதிக் கண்டார்"

என்கிறார்.

தெய்வத் திருநாடாகிய தமிழகத்தில் நீர்வளம் நிறைந்த சோழ நாட்டில் பிறந்த பெருங் கவிஞர், அந்நாட்டைப் புனல் நாடாக்கும் பொன்னியைப் புகழ்ந்து போற்றுவது இயல்பன்றோ! கங்கை காவிரியை ஏற்குமென்றால் கங்கையினும் பெரிது காவிரி என்பது தெரிகிறதல்லவா?

இங்ஙனமே மிதிலையின் வீதியை அழகு செய்வார், 'பொன்னி அள்ளி கொழிக்கும் அழகிய பொருள்களைப் போன்றிருந்தது அவ்வீதி' என்கிறார்.

திருஞான சம்பந்தப் பெருமான் குரங்காடுதுறைப் பதிகத்தில் காவிரியைப் பற்றியும், அது ஈர்த்து வரும் பொருள்களைப்பற்றியும், ஓவியம்போல் எடுத்துச் சொல்லுகிறார். அவற்றையெல்லாங் கூறின் விரியும். ஒன்றைமட்டும் கூறுகிறேன். அது காவிரி யீர்த்து வரும் பொருள்கள்.

"முத்துமா மணியொடு முழைவளர்
ஆரமும் முகந்துந்தி
எத்துமா காவிரி"

என்பது.

"தண்ணீருங் காவிரியே
தார்வேந்தன் சோழனே"

என்கிறார் ஒரு புலவர்.

"பொன்னி பொன்கொ ழிக்குங் காவிரி"

என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

"காவிரி தோய்ந்து போர் தோய்வரோ
சிறுகாற் புனலே"

எனத் துறைசைக் கோவை ஆசிரியர் சொல்லுகிறார்.

"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்"

எனப் பாட்டிசைக்கும் பாரதியார் வீரங் கொண்டு தீரமுடன் செப்புகிறார். இயற்கை யெழிலை எழுதும் இவர் காவிரியின் கவினைக் கண்டே போலும், செந்தமிழ் நாட்டு யாறுகளைச் செப்பு முன்னணியில்,

"காவிரி தென்பெண்ணை பாலாறு"

என்கிறார். இங்ஙனம் இன்னும் பல் புலவர்கள் எடுத்துக் காவிரியைச் சிறப்பிக்கின்றார்கள். அதனை விரிக்கிற் பெருகுமெனச்சுருக்கி வரைகிறேன்.

இங்ஙனம் புலவர் பலரால் போற்றப் பட்டவள் உயிரனைத்தையும் ஒருங்கு காப்பவள் நமக்கு சிறப்பாக நலனைச் செய்து செவிலித்தாயாய சிறப்பினை ஆய்வாம்.

அன்புள்ள நண்பர்களே !

நங்கல்லூரி கட்டிய நாவலன் யார்? விஞ்சிய புகழுடைத் தஞ்சை மன்னவன். அக்காவலனுக்குக் கல்லூரி கட்ட இருந்த பொருள் யாது? காவிரி யன்னை கொழித்த பொன்னன்றே? காவிரி யில்லையேல் அவன் பொருள் பெறுவது யாங்ஙனம்? கல்லூரி கட்டுவது யாங்ஙனம்? அதற்குப் பொருள் கொடுத்த பெருமை காவிரிக்கு உரித்து. நம் நற்றாயாய காவலனுக்குப் பொருள்கொடுத்த தோழி யாவாள் காவிரி. காவிரி வளங்குன்றின் கல்லூரி யாண்டிருக்கும்? நாடோறும் நம்மைக் காப்பவள் காவிரி யல்லளோ? இங்ஙனம் நம் நற்றாயாய மன்னவற்குத் தோழியாகி, அவள் மகவு ஆகிய நமக்குக் கல்லூரி வழியாக அவலம் போக்கி, அறிவும், ஒழுக்கமும் கொடுத்து, நம்மை வளர்க்கும் செவிலித்தாயாய்ச் சிறப்புடன் விளங்குகிறாள். ஆதலின் அவ்வன்னையை வாழ்த்தி வணங்குவாம்.

முடிவு

காவிரி குடமலையிற் பிறப்பதென்பதும், நிலத்தையுங் கடந்து கடற்குச் சென்று அழகு செய்கிற தென்பதும், 'இவ் யாற்றைக் காந்தமன் எனுஞ் சோழன் தோற்றுவித்தான்; கரிகாற் பெருவளத்தான் கரை கட்டினான்' என்பர் ஆராய்ச்சி யறிஞர் என்பதும், இவ்யாற்றின் கரை பசுஞ் சோலைகளையும் மரங்களையும் தன் பாங்கர்கொண்டு கவினைச் செய்கிறது என்பதும், யாற்று நீர் பல உண்மைப் பொருள்களை யுணர்த்துவதுபோல ஓடுவதும் பல திற நீரோடு ஓடுவதும் அழகை அளிக்கின்றன என்பதும், காலையும் மாலையும் இதன் கரையமர்ந்து கவினைக்காணின், இயற்கை யழகு மிக்கது இன்பம் நல்கும் என்பதும், இவள் அழகு செய்வதோடு அனைத்துயிர்க்கும் பயனையுங் கொடுக்கிறாள் என்பதும், இவளைப்பண்டைப் புலவர்கள் போற்றிய முறை இவையென்பதும், நமக்குமட்டும் சிறப்பாக இவ்வாறு செய்யும் நலன் இவை யென்பதும் ஆய்ந்தோம். இனி இவளை வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்க காவிரி, வாழ்க தமிழகம்
வாழ்க தமிழ்மொழி.

காவிரி வாழ்த்து

காவிரி போற்றுதும் காவிரி போற்றுதும்
பாவிரி தமிழ்த்தாய் பாங்குடன் வளரத்
தஞ்ச மென்றவர்க் கஞ்சலென் றருளும்
விஞ்சிய புகழுடைத் தஞ்சை மன்னற்கு
வானது பொய்ப்பினுந் தானது பொய்யாது
வான்பொருள் நல்கும் வள்ளற் றன்மையால்
வேற்றுமை களைமின் ஒற்றுமை வேண்டுமின்
ஈண்டிலங் கியாக்கை ஆண்டவ னிருப்பெனு
மாண்டகு மறையைக் காண்டக விரித்து [ம்
ஏர்பெற இயங்குநின் சீர்மைத் தாளன்னே !
மன்னு வுலகத்து மன்னிய புகழோ
டின்னல் களைந்தும் இன்பம் ஈந்தும்
கண்ணிற் கினிய காட்சி யளித்தும் [தே
' அஞ்சையுங் கவர்ந்தே நெஞ்சையுங் கவர்ந்
ஒருமையி னிறுத்துநின் பெருமை தானென்
புன்மா முதலா மன்னுயிர் கட்கும் [னே'!
நன்னர் செய்து நன்றே யியங்குவை
நீயெனின் யாரே நின்னை ஒப்பார்
ஞாயிறு திங்கள் ஆயிரு சுடரும்
மாயிரு ஞாலத்து மன்னு ஞான்றெலாம்
வாழிய ! காவிரி வாழி !! வாழியரே !!!

நமது நாட்டில் வழங்கும் பழங்கதைகள்

சிகண்டி கதை

[திரு. சோமசுந்தர தேசிகர்]

(உரிமை ஆக்கியோர்க்குரியது)

ஓர் ஊரிலே ஒருவனுக்கு ஒரு பெண் மகள் இருந்தாள். அவளுக்குச் சிகண்டியென்றுபெயர். அவளைப் பெற்றோர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தனர். அவ்வாறு வளர்த்து வந்ததனால் அப்பெண் சொற் பேச்சு கேளாமல் தன்னிஷ்டம்போல் நடக்கலானாள். அவள் உற்ற வயது அடைந்தபொழுது பெற்றோர் ஒருவனைத் தேடி அவளுக்கு மணஞ் செய்வித்தனர்.

ஒரு பெண் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டால் அவள் கணவனோடு இருந்து வாழ்ந்து வரவேண்டுமென்பது நாட்டு வழக்கம். அந்த வழக்கப்படி அந்தச் சிகண்டியும் அவள் கணவனும் தனிப்பட வாழ ஆரம்பித்தனர். சிகண்டி ஒருவருக்குக் கட்டுப்பட்டு இதுவரை வாழ்ந்து வந்தவ ளல்லளாதலால், கணவன் சொற்படி கேட்க அவள் மனம் இடங்கொடுக்க வில்லை. ஆயினும் கணவன், தான் ஆண்பிள்ளை யென்பதைக் காட்ட முயன்றான். காலையிலெழுந்ததும் அவளால் யாதொருபிழை நேராவிட்டாலும் அவளுக்குப் பத்துப் பதினைந்துஅடி கொடுத்துவிட்டு 'இன்று சமையல் செய்ய வேண்டியதில்லை' என்று சொல்லி விட்டுப் போய்விடுவான். சிகண்டி ஏறுக்குமாறாக நடப்பவளாகையால் உடனேஎழுந்து நீராடி நல்லாடையுடுத்துப்பக்குவமாகச் சமைத்து வைப்பாள். இவ்வாறே நடப்பது வழக்கமாக விருந்தது.

ஒருநாள் அவளது உறவினர் சிலர் விருந்தாக வந்திருந்தனர். கணவன் அன்றும் வழக்கம் போலச் செய்வது தவறென்று எண்ணி வெளியே போய் விட்டான். சிகண்டிக்கு அது தகுதியென்று படவில்லை. மேலும் அவளுக்கு வழக்கமாக நடப்பது நடந்தாலொழியக் காரியங்கள் செய்தல் இயலாது. பார்த்தாள் சிகண்டி, 'தங்களவர் வந்தால் தானே நடக்கும், எங்களவர் வந்தால் ஏனென்று கேட்பாரா?' என்று சொல்லி ஓர் அம்மியைத் தூக்கிக் கூரையின் மேல் வைத்து மேலே தள்ளிக்கொண்டு 'அப்படா ஐயடா' என்று சிறிது நேரம் வருத்தப்பட்டு விட்டு, உடனே எழுந்து சமையல் செய்தாள். அது முதல் அப்பெண் நல்வழிக்கு வந்தாளென்று சொல்வது வழக்கம். அது முதல் ஏறுமாறாக நடக்கும் பெண்டிரைச் சிகண்டி யென்றும், அச்செய்கையைக் குறிக்கச் **சிகண்டி கதை** யென்றுங் கூறுவது வழக்கமாயிற்று.

இதனை யொருவாறு ஒத்து **ஜாதகக் கதை**யொன்று காணப்படுகிறது. அது வருமாறு :—

ஒரு காலத்திலே காசியம் பதியை ஒரு துஷ்ட அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அவன் தன் பெண்டு பிள்ளைகளையே யன்றி வேலைக்காரார், ஜனங்கள் முதலாயினோரையுந் துன்புறுத்தி வந்தான். அவன் இறந்ததும் அவன் மக்கள் அவனை யெரித்துச் சாம்பராக்கி விட்டனர். மக்கள் அந்தத் துஷ்ட அரசனுடைய மகனுக்குப் பட்டங்கட்டி மகிழ்ச்சி கொண்டாடினார்கள். அப்பொழுது வாயிற் காப்போன் மட்டும் சந்தோஷ மில்லாமல் துக்கக் குறியோடிருந்தான். இதனைக் கண்ட இளவரசன் அவனைக் கூப்பிட்டு அவன் மாத்திரம் மகிழ்ச்சி யின்றி யிருப்பதற்குக் காரண மென்ன வென்று விசாரித்த போது, அவன், 'அரசே! பெரிய அரசர் உயிரோடிருந்த காலத்தில் அவர் அரண்மனையிலிருந்து புறப்பட்டு வெளியிற் போகும்போது எட்டுக்

குட்டு, திரும்பவரும்போது எட்டுக் குட்டு குட்டுவது வழக்கம். இப்பொழுது அவர் சென்றிருக்கும்யமபுரத்திலும், இயமன் அவர்தலையிற் குட்டினல் அந்த நாட்டிலிருப்போர் 'இவன் கெட்டவன்' என்று அங்கிருந்து கீழே அவரைத் தள்ளிவிட்டால் மறுபடியும் அவர் இவ்விடம் வருவாரே, அப்பொழுது அடியேனுக்கு ஒன்றுக்கு இரட்டிப்பாகக் குட்டுக்கள் கிடைக்குமே, என் செய்வது என்று வருத்தப்படுகிறேன்' என்று கூறினன். அரசன் நகைத்துவிட்டு, இறந்தவர் மறுபடியும் பிறப்பதுண்மையே யாயினும் அதே உடலிற் சேர மாட்டார்களென்று கூறினன்.

சு ந் த ர சு லோ ச ன

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(உரிமை ஆக்கியோருடையது)

(தொடர்ச்சி)

இதழ் 2

"கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்."
—சிலப்பதிகாரம்

"உரிமை உறையுள்" என்னும் அழகிய நாமந் தாங்கிய மாளிகையே மங்களபுரி ஜமீன்தாராகிய சந்திர சேகரப் பிரபுவின் உறையுளாகும். "பெண்ணுலகிற்பிறந்த யான் அடிமையன்ருே" என்று தம் முயிரினும் உயர்ந்த காந்தாவின் கதறலைச் செவி மடுத்ததும் "அடிமையெனக் கருதப்படும் பெண்ணுலகின் உரிமையை நாட்டுவதிலேயே நான் என் வாழ் நாட்களைக் கழித்திடுவேன்" என்று உறுதி வாக்களித்த சந்திரசேகரப் பிரபு, அன்றே "ஆனந்த நிலையம்" என்று வழங்கப்பட்ட தம்முடைய மாளிகையை "உரிமை உறையுள்" என மாற்றலாயினர். புறவேடம் பூண்டு, அகத்தழுக்கு மிகுந்து, உலகை ஏய்த்துத் திரியும் பேயர்களைப் போலும் மங்களபுரி ஜமீன்தார், தம்முடைய இயற்கைஎழிலும் செயற்கை அழகும் இயைந்துவிளங்கிய தம்முடைய மாளிகையின் பெயரை மாற்றியதால் தாம் காந்தாவிற்களித்த உறுதி வாக்கு நிறைவேறிவிட்டதெனக் கனவிலுங்கருதினரில்லை. கொண்ட பெயருக்கிணங்க ஆங்குப் பெண்ணுலகும் ஆணுலகும் உரிய உரிமைகளுடன் உறைந்துவந்தன. ஆன்ம உணர்ச்சியற்று மிருக நீர்மை மிகுந்த மேனுட்டு உரிமைத் தத்வம் "உரிமை உறையுளில்" உறைந்திற்றில்லை; பண்டைத் தமிழகத்தில், அன்பு நெறியும் இன்பவாழ்வும் இயைந்தொளிர எத்தகைய உரிமை உற்ற துணையாகப் பொலிந்ததோ, அத்தகைய உரிமையுடன் 'உரிமை உறையுள்' இலங்கியது.

கதிரவன் கருங் கடலுள் ஆழுஞ் சமயம், தன்னலங் கருதாப் பிறக்குரியாளரைப் போலுந் தன் கறையை நீக்கவெண்ணுது, உலகின் இருள் கறையை ஒழித்தற்கென மதியவன் தோன்றினன். கருணகரனின் கருணை இத்தகைய இன்பமுடைத்தெ்தன விளக்குவான் போலுந்தோற்றிய முழுமதியைக் கண்ட அல்லியும், காதலனைக் கண்ட காதலியைப் போலும் முகம் மலர்ந்து, மணங் கமழ்ந்து விளங்கியது. உயிரெனமதித்து, வரித்த அன்பனையல்லால் ஏனையோரைக்கண்ணெடுத்தும் பாரேன் என்று உலகிற்கே ஓர் உவமையை எடுத்தோதுவ தொப்பத் தாமரையுங் குவிந்தது. புற வேடதாரிகளைக் கண்டு மயங்கி அறியாமையால் அவர்களுக்குத் தொண்டாற்றி இறுதியில் ஏமாறும் பேதைகளைப் போலும் மதியைக் கண்ட புள்ளினங்கள் கதிரவனென மயங்கிப் பாடலாயின.

அதுகாலை, நறுமணங்கமழும் மலர்ச் செடிகளுங் கொடிகளும் அணியணியாக

வருத்தமைக்கப்பட்ட "உரிமை உறையு"ளின் நந்தவனத்துள் ஓர் அழகிய மேடையின் மீது இரு பெண்ணணங்குகள் அமர்ந்து வாடிய வதனங்களுடன் வார்த்தையாடினார்கள்.

"சாரத! என்னுயிரினு முயர்ந்த என்னக முரியார் எங்குச் சென்றனரோ? என்னிடமுங் கூறாது வழக்கத்திற்கு மாறாக அவர் மறைந்ததற் கொருகாரண மிருத்தல் வேண்டும். அவர் சென்னையிலிருந்து வரும்போதே வாடிய வதனத்துடன் இருந்ததை நீ கவனித்தாயா? நேற்று மாலை என்னுடன் இங்கு அவ்வளவு அன்புடன் வார்த்தையாடி நின்ற அவர் இவ்வாறு திடீரென மறையக் காரணமென்ன?"

"சுலோசனா! அறிவும், அறிவுக்கேற்ற அழகும், அழகுக்கேற்ற ஒழுக்கமும் நிறைந்த அண்ணா இவ்வாறு திடீரென மறைந்ததற் கொரு காரணம் இருந்தே தீரவேண்டும். எனினும், அவர் ஒருவரிடமுங் கூறாது மறைந்ததே பெரும் விந்தையாக இருக்கின்றது. எனக்கொன்றும் விளங்கவில்லை. காலையிலிருந்து தந்தையின் முகமும் வாடியே இருக்கின்றது."

"சாரதா! என் காதலர் மறைந்த விந்தையே நம் தந்தையையும் வாட்டி நிற்கின்ற தென்பதற் கோரையமுமில்லை. இளமையிலிருந்து வளர்த்த பாசமும் அவரை விட்டு நீங்கிடுமோ?"

"சுலோசனா! மாலை ஐந்து மணிக்கு வெளியிற் சென்ற தந்தை, மணி ஏழாகியும் ஏன் வரவில்லை?"

இடியேறு

பதின்மூன்றும் ஆண்டு

"நவசக்தி" தனது பன்னிரண்டாம் ஆண்டைக் கடந்து பதின்மூன்றும் ஆண்டைஎய்தியிருக்கிறாள். கடந்த பத்தாண்டுகளாக "நவசக்தி" வாரந்தோறுந் தவறாது வெளிப்போந்து உலாவிய திருக்கோலப் பெற்றியை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். பதினோராம் ஆண்டில் அரசாங்கத்தார் ஈடு காணங் கேட்ட நாள்முதல் "நவசக்தி" ஏறக்குறைய ஆறு திங்கள் வெளிவராது நின்றது நேயர்கட்குத் தெரியும். அவ்வாறு திங்கள் நிறுத்தத்தால் "நவசக்தி" நிலயத்துக்கு நேர்ந்த கட்டமும் நட்டமும் "நவசக்தி" வாழ்வையே குலைத்து விட்டன என்று கூறல் மிகையாகாது. "எல்லாம் ஆண்டவன் செயல்" என்று நெஞ்சில் நிறைவுகொள்வது எமது வழக்கம். இப்பொழுது "நவசக்தி" திங்கள் வெளியீடாக மாறியது பற்றி நாம் சிறிதுங் கவல்கின்றேமில்லை. சந்தாதாரர்களிலும் பலர் மனங் கவலாதிருப்பது "நவசக்தி"யின் அதிர்ஷ்டமே யாகும். திங்கள் வெளியீடு இனிச் செய்யப்போகும் ஆக்க வேலைகள், நாட்டிற்கு இன்றியமையாதன என்பது நாள்டைவில் விளங்கும். அவ்வாக்கத்துக்கு ஊக்கமூட்ட வேண்டிய பொறுப்பு, சந்தாதாரர்களுடையதென்று சொல்ல வேண்டுவதில்லை. ஏழை "நவசக்தி"க்கு ஆதரவு நல்குமாறு பொதுவாகத் தமிழ் மக்களையுஞ் சிறப்பாகச் சந்தாதாரர்களையுங் கேட்டுக் கொள்கிறோம்.

மந்திரி மாறுதல்

சென்னை அரசாங்கத்தின் மாற்றப்பட்டபகுதியின் நிர்வாகத்தில் ஸ்ரீமான் முனிசாமி நாயுடு அவர்களைத் தலைமை கொண்டு 'ஜஸ்டிஸ்' கட்சியார் மந்திரிப் பதவிகளை வகித்திருந்தனர். 'ஜஸ்டிஸ்' கட்சிக்குள்ளாக மந்திரிப் பதவியை யொட்டிப் பிணக்கு ஏற்பட்டது. அப்பிணக்குப் பெரிதும் தலைமை மந்திரிப் பதவியை யொட்டியே எழுந்தது. அதைப்பற்றி ஒருவித முடிவு காணத் தஞ்சையில் 'ஜஸ்டிஸ்' கட்சி

மகாநாடு ஒன்று கூடிற்று. அம் மகாநாடு குழப்பத்தில் முடிந்தது. மீண்டும் அம்மகாநாடு கூடித் தன் கருத்தைத் தெரிவிப்பதற்குள் மந்திரிக்கூட்டத்தில் மாறுதல் ஏற்பட்டது. அம் மாறுதலால் முதன் மந்திரியாக இருந்த ஸ்ரீமான் முனிசாமி நாயுடு அவர்கள் தமது பதவியை இழத்தல் நேர்ந்தது. அவர் பீடத்தில் பொப்பிளிராஜா முதன் மந்திரியாக அமரலானர். இம்மாற்றத்தால் மாகாணத்திற்குப் பெரு நலமோ பெருந்தீமையோ நேர்ந்து விடாதென்பது திண்ணம். இதனுல் ஒழுங்கு முறையில்லை யென்பது மட்டுஞ் சிறப்பாக விளங்குகிறது. தஞ்சையில் குழப்பத்தில் முடிந்த மகாநாடு மீண்டுங் கூடித் தன் கருத்தை வெளியிடுதற்கு முன்னர், சென்னைக் கவர்னர் மந்திரிக் கூட்டத்தில் மாற்றஞ் செய்யப் புகுந்தது பெருந்தவறேயாகும். 'ஜஸ்டிஸ்' கட்சிக்குள் இனியாதல் தலைமைப் போராட்டம் நிகழாதிருக்குமாறு அக் கட்சியார் நடந்து கொள்வது சிறப்பு. அவர்கள் அவ்வாறு நடப்பார்களா?

சங்கர பாஷ்யம்

ஸ்ரீமான் கடலங்குடி நடேச சாஸ்திரியார் அவர்கள் சங்கர பாஷ்யத்தைத் தமிழில் மொழிபெயர்த்து உதவி வருவதைக் குறித்து நாம் பன்முறை எழுதியுள்ளோம். ஆகவே ஸ்ரீமான் சாஸ்திரியார் அவர்களைப் பற்றியும், அவர்களது மொழி பெயர்ப்புத் திறத்தைப் பற்றியும் புதிதாக ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை. இப்பொழுது மூன்றாவது அத்தியாயம் நமது பார்வைக்கு வந்தது. அதன் பெயர் "சாதனுத்தியாயம்" என்பது. அவ்வத்தியாயத்தில், ஈஸ்வர பிராப்திக்குரிய சாதனம் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்கண் நான்கு பாதங்கள் அடங்கியிருக்கின்றன. சாதன முறைகளும், பாவ புண்ணிய விளக்கமும், நிர்க்குண சகுண ஆராய்ச்சியும், ஆத்மாக்கள் மண்டலங்களை அடைவதும், அவை மீண்டும் தோன்றும் முறையும், ஜீவ இயல்களும், இன்ன பிறவும் கடாவிடைகளான் நிறுவிக்காட்டப்பட்டிருக்கின்றன. இதுகாலே, சர்ஆலிவர் லாட்ஜ் உள்ளிட்ட அறிஞர்கள் கண்டு வரும் 'மரணத்தின் பின் மனிதர் நிலை' என்பதுபோன்ற பொருள்கள் இம்மூன்றும் அத்தியாயத்தில் பல விடங்களிற் காணப்படுகின்றன. புற முயற்சியால் இப்பொழுது விளங்கப் பெறும் சில நுட்பங்கள், ஆதிசங்கரர் அகமுகத்தில் விளங்கினமை ஈண்டு குறிக்கத்தக்கது. ஸ்ரீமான் நடேச சாஸ்திரியார் அவர்கள் மிக ஊக்கங்கொண்டு உழைத்து வருகிறார்கள். அவர் தம் ஊக்கத்துக்கு ஊக்கமூட்ட வேண்டிய பொறுப்பு, தமிழ் மக்களுடையது என்று சொல்லவும் வேண்டுமோ? தமிழ்மக்கள் இம்மொழி பெயர்ப்பு நூலை ஆதரிப்பார்களாக. விலை ரூபா ஆறு. விலாசம்: கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 72, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை; அல்லது 'கஸ்தூரிரங்க விலாஸ்', நடேசஐயர் தெரு, மாம்பலம், சென்னை.

தேவீ மகாத்மியம்

இப்பெயர் வாய்ந்த நூலொன்று நமது பார்வைக்கு வந்தது. தேவீமகாத்மியம் வடமொழியில் மார்க்கண்டேய புராணத்தி லிருப்பது. வடமொழியிலுள்ள அப் பகுதியைத் தமிழில் பெயர்த்து உதவிய பலாசூர் - பண்டித நா. இராமநாத சாஸ்திரியார் அவர்கட்கு நமது நன்றியறிதல் உரியதாக. இந் நூற்கண் தேவிவரலாறு, அசுரர்கள் வதம், தேவர்கட் கருள்புரிதல், தேவர்கள்வாழ்த்து முதலியன அடங்கியிருக்கின்றன. தேவியின் மகிமை ஆங்காங்கே மிக அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு இனிய எளிய நடையில் அமைந்திருக்கிறது. தேவிபக்தர் ஒவ்வொருவரும் இந்நூலை ஆதரிப்பாராக. விலை அணு எட்டு. விலாசம்: பண்டித.நா. இராமநாத சாஸ்திரி, 'நாகேஸ்வர விலாஸம்', மயிலாப்பூர், சென்னை.

விஜய ரக்ஷித கவசம்

நீங்கள் கவலையற்று அச்சமின்றி வாழ விரும்பினால்—, நற்கியாதியுடனும் தன சம்பத்துடனும் புத்திர சந்தானத்துடனும் ஆரோக்கிய திட சரீரத்துடனும் இருக்க எண்ணினால் நமது கவசத்தை அணிந்து கொள்ளுங்கள். இது, நியாயமான எக்காரியத்திலும் வெற்றியையும், தொழிலில் மேன்மையையும், குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமையையும் வேறு பல நலன்களையும் உண்டுபண்ணும்.

வெள்ளிக் கவசம் ரூபா 5. தங்கக் கவசம் ரூபா 15.

விலாசம் :—பிரபசர் - கா. கோவிந்தாச்சார்,
1/34, லஸ் சர்ச் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

காதம்பரி

இந்நூல் வடமொழியில் பாணபட்டனார் என்னும் புலவர் சிகாமணியினால் செய்யப்பட்டு, தன்னைக் கற்பார்க்கு இன்பமளித்துத் திகழ்வது, வடமொழியாளர் பலர்க்குந் தெரிந்ததே. இந்நூலின் அருமை பெருமைகளை வடமொழி பயின்றாரேயன்றிப் பிறரும், சிறப்பாக மாணவரும் உணர்ந்து இன்புற வேண்டி, இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பெற்று வெளி வந்துள்ளது. விலை அணா 12

தென்னாட்டுப் பெரியோர்

இரண்டாம் பதிப்பு

எஸ். எஸ். அருணகிரிநாதர்

(Tamil Pandit, T. T. V. High School, Madras)

அன்பிற் பெரியாராய்த் திகழ்ந்து புலவர் முதல் பாமரர் ஈறாக யாவரும் தெரிந்து போற்றுந் தன்மை வாய்ந்துள்ள தாயுமானவர், குலசேகராழ்வார், பட்டினத்தார், திருமங்கை யாழ்வார் ஆகிய நான்கு பெரியோர் தம் திவ்விய சரிதங்களையும் இந்நூலின் கண் பரக்கக் காணலாகும். இந்நூல் எளிய தமிழ் நடையிலே கற்போர் உள்ளங் கவரும் வண்ணம் அழகுபெற அமைந்துள்ளது. விலை அணா 10

பன்னிரு திருமுறையாசிரியர் வரலாறு

அ. பாலசுப்பிரமணிய பிள்ளை

(Head Tamil Pandit, Town High School, Kumbakonam)

எழுதியது விலை அணா 10

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின் **மகாபாரதம் தமிழ் வசனம்**

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண்ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

இதற்கு ஒரு
வட்டமேசை
மகாநாடு
வேண்டுமா
?
ஊரறிந்த
உண்மை
யாயிற்றே!

ருக்மணி
குக்கர் அடுக்கு
சமையலுக்கு நிகரற்றது.
1, 2, 4, 6, 8, 12, 14 பேர்
களுக்கு ஏழு அளவுகள்
ரூ. 10-8, 14, 18, 23, 29
35, 41. விபரபுத்தகம் இனும்.

இன்றே
எழுதுக.
ருக்மணி
குக்கர்
கம்பெனி,
இராயபுரம், (3)
சென்னை.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஷி சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாந் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினுல் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே. விசுவநாத செட்டியார்,

வைத்யம், லாலுகுடி, திருச்சி ஜில்லா.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் அளிக்கப்பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5. எதிர்காலத்தைப்பற்றின 3 கேள்விகளுக்கு ரூபா 1. மேல் கேள்வி 1க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.)

பண்டித காழியூர் :
ம. ஸ்ரீநிவாசாச்சாரியார்,
1/34, லஸ் சர்ச் ரோட்,
மயிலாப்பூர், மதராஸ்.

கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.
ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

காரைக்காலம்மையார்
திருப்பாடல்கள்

திரு. வி. க. இயற்றிய
அரும்பதவுரையுடன்
விலை அணு 6.

ஆனந்தாதி
ஆனந்த அட்சயாந்த
73-வருட
பஞ்சாங்கம்
விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு,
இராயப்பேட்டை, சென்னை.

சென்னை ரிஜிஸ்டிரேஷன்

இன்ஸ்பெக்டர் - ஜெனரல் எழுதுவதாவது :—

டாக்டர் பண்டிட், இ. எஸ். கோபன் அவர்களது காயசித்தி மகரத்வஜத்தின் பலன்களைப் பரீக்ஷிக்கும் பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. நாடிப் பரீக்ஷையில் பண்டிதருக்குள்ள திறமையையும் நான் கண்டுள்ளேன். அவர் நோய்களைக் கண்டறிவதில் அற்புதமான சாமர்த்தியம் வாய்ந்தவர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவரது காயசித்தி மகரத்வஜம் எனக்கு அதிக அனுகூலமளித்திருக்கிறது. டாக்டரின் ஸ்தாபனம் வைத்தியத் தொழில் சீரும், சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமென்பதே என் கோரிக்கை.

ராவ் பஹதூர் பி. வி. ஸ்ரீ ஹரி ராவ் நாயுடுகாரு.

20-தினங்களுக்கான 40-மாத்திரைகளின் விலை ரூபா, 5.

உத்தரவாத சிகிச்சை

வெண் குஷ்டம், மதுமேகம், பாரிச வாய்வு, கீல்வாய்வு, குல்மம், காசநோய், மூலவியாதி, ஸ்திரீ சம்பந்த வியாதிகள், சூதகவாய்வு, பெரும்பாடு, பெண் மலடு இவைகளுக்கு நிச்சயம் சிகிச்சை செய்யப்படும்.

கீழ்க்கண்ட இடங்களில் நேரில் கன்ஸல்ட் செய்க. அல்லது விவரமாக எழுதுக.

தலைமை ஆபீஸ் :
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
காலை 8-மணிமுதல் 11-மணி வரை.

பிராஞ்சு :
193, மவுண்ட்ரோட்,
மாலை 3 மணி முதல் 6-மணி வரை.

தமிழ்நாடு ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்,

தந்தி விலாசம் : "காயசித்தி" | தபால் பெட்டி நெ. 278, மதராஸ். | டெலிபோன். நெ. 3767.

எல்லா டாணிக்குகளுக்கும்
நம்முடைய
பெரிய தலைவன் யார் ?

மதனமஞ்சரி

மாத்திரையே

பெரிய தலைவன். இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, இந்திரிய ஸ்கலிதம் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தேகத்தை வஜ்ர சரீரமாக்கி விடுகின்றது. ஒரு டப்பி விலை ரூபா 1.

இனம் ! வைத்தியா வித்தியா இனம்!!
விபரம் வேண்டுவோர்
எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

மதனமஞ்சரி பார்மசி,
1/94, சைனுபஜார் ரோட், மதராஸ்.

ஏஜண்டு :—
M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோகிராமட் ரோட்,
பினங்கு S. S.

தேகபலம்

புத்திர சந்தானம்

இவைகளை யடைய எங்கள்
ஆதங்கநிக்ரஹ மாத்திரைகளை
உபயோகியுங்கள்

இம்மாத்திரைகள் சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன; மேலும், தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம் ! இனம் !!

காம சாஸ்திரம்

என்னும் புத்தகம் கேட்போருக்கு இனாமாகவும், தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, சென்னை.

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகிறது

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராண மென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக்கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்களும் எளிதில் வாங்கிப் பயன் பெறும் பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பு, டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை	,,	4 0 0
வெளியூர்—தபாற் செலவுடன்	,,	4 8 0

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

குறிப்பு :—புத்தகம் முழுவதற்கும் 1932-ம் ஷு ஆகஸ்டுமீ இறுதிக்குள் சென்னை வாசிகள் ரூபா $3\frac{1}{2}$-ம் வெளியூரார் ரூபா 4-ம் முன் பணம் செலுத்த வேண்டுமென முன்னம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அந்தக் காலம் கடந்துவிட்டமையான், இப்பொழுது முன்பணக் கட்டணம், சென்னைக்கு 4 ரூபாயாகவும், வெளியூருக்கு $4\frac{1}{2}$-ரூபாயாகவும் விதிக்கப் பட்டிருக்கிறது.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ...	1	6
குருதேவர் வாக்கியம்	0	5
நமது தாய்நாடு	0	8
பக்தியோகம்	0	10
கர்மயோகம்	0	12
சிகாகோ பிரசங்கம்	0	5
விவேகானந்தரின் கடிதங்கள் ...	0	8
எனது போர் முறை	0	2
பவாஹாரி பாபா	0	3
ஜகஜ்ஜீவபர விளக்க வினாவிடை ...	0	13
பக்தி மார்க்கம்	0	2
முத்திநெறி	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.